பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

# தினப்புயல்

news THINAPPUYAL තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -341

# மியன்மாரைப் போன்ற இராணுவப் புரட்சி இலங்கையிலும் ஏற்படுத்தப்படுமா?

# ஜெனீவா விவகாரங்களில் உலக நாடுகளின் கண்துடைப்பு



# முகநூலில் தேசியத்தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தை வெளியிட்டால் சட்ட நடவடிக்கை – இராணுவத் தளபதி

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# முகநூலில் தேசியத் தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தை வெளியிட்டால் சட்ட நடவடிக்கை - இராணுவத் தளபதி




இலங்கை அரசினால் தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் அமைப்பின் தேசியத் தலைவரான பிரபாகரனது மற்றும் அவ் அமைப்பு சார்பானவர்களின் புகைப்படங்களை சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்பவர்களை உடனடியாகக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

தமிழ் மக்களது தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைப் போராட்டம் எதற்காக இந்நாட்டில் முன்னெடுக்கப்பட்டது என்பதற்கான ஒரு வரலாறு இருக்கிறது. ஆகவே டட்லி சேனாநாயக்க தொடக்கம் தற்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ வரையான ஆட்சியாளர்கள் இந்நாட்டில் முப்பது வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தத்துடன் ஏதோவொரு வகையில் தொடர்புபட்டவர்கள்தான். தமிழினம் அனுபவித்துவருகின்ற துன்பங்களுக்கெல்லாம் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் தான். தமிழ் மக்களது போராட்டங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு பரிமாணங்களைக் கொண்டபோதிலும், திம்பு முதல் டோக்கியோ வரையிலான சர்வதேச மற்றும் உள்ளூர் ரீதியான பேச்சுவார்த்தைகள் இந்நாட்டில் இடம்பெற்றது என்பதை நாம் அனைவரும் ஒத்துக்கொள்வேண்டும். இதில் தமிழ் மக்களது போராட்டத்தை தோற்கடிப்பதற்காக வடகிழக்கில் இருக்கக்கூடிய முஸ்லீம்களில் பலரை அரசு பயன்படுத்தியது. தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழினத்தின் விடிவுக்கான இலட்சியம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது ரெலோ, புளொட், ஈபிடிபி, ஈபிஆர்எல்எப் போன்ற இயக்கங்களை மற்றும் வரதராஜப்பெருமாள் போன்றவர்களையும் தம்வசப்படுத்தி தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். பின்னர் இந்தப் போராட்டம் தொடர்ந்து கொண்டிருந்த போது இப்போராட்டத்தினை மழுங்கடிக்கும் நோக்கில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் உள்ளவர்களை பிரித்தாளுவதன் ஊடாக இந்தப் போராட்டங்களை, தமிழ் மக்களை வெற்றி கொள்ளலாம் என அரசு தீர்மானித்தது. அது போல் இந்தியாவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிரந்தரமாக பகைமைகளை உருவாக்குவதன் ஊடாக ரணசிங்க பிரேமதாசா மற்றும் அப்போதிருந்த உயர் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட நடவடிக்கைகளால் தான் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் கொல்லப்பட்டார்.

ஆகவே இலங்கையினுடைய எந்த அரசுகளாலும் தமிழ் மக்களுக்கானத் தீர்வினை வழங்க முடியாது. பூகோள ரீதியான நெருக்குதல்களினாலும் பயன் இல்லை. இலங்கை நாடு தமக்குத் தேவை என்கிற காரணத்தினால் உலக நாடுகள் இலங்கைக்கு ஆதரவளிக்கவே முன்வந்தன. சர்வதேச ரீதியாக இலங்கைக்கு நெருக்குதல்கள் ஏற்படுகின்ற வேளைகளில் எல்லாம் உதவிக் கரம் நீட்ட வல்லரசு நாடுகள் தயாராக இருக்கின்றன.

விடுதலைப்புலிகள் தரை கடல் வான் என்கின்ற உயரிய கட்டமைப்புக்களைக் கொண்டு தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடியவர்களாக, உலக பயங்கரவாத அமைப்புக்களில் இருந்து வேறுபட்டவர்களாகக் காணப்படுகின்றனர். ஒரு இனத்தின் விடுதலைக்காகப் போராடியவர்களை பயங்கரவாதிகள் என அழைக்க முடியாது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாத சிங்களத் தரப்பினர் பயங்கரவாதிகள் என விடுதலைப்புலிகளை முத்திரை குத்தி, இறுதியில் அப்பாவிப் பொதுமக்கள் வரை அழித் தொழிக்கவேண்டும் எனச் செயற்பட்டனர். இது இன்று ஆபத்தான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. எனினும் இன்றைய ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, இராணுவத் தளபதிகளில் பலர், ரணில் விக்கிரமசிங்க உட்பட்ட பல முக்கியத் தரப்பினர், A9 வீதியின் திறப்பின் போது கலந்துகொண்டவர்கள் என பலர் இன்றும் உள்ளனர். இவர்களில் பலர் அன்று விடுதலைப் புலிகளுடன் கைகுலுக்கியவர்கள் தான். அப்படியெனில் அவர்களையும் தடைசெய்து கைது செய்யவேண்டும். ஆனால் அவர்கள் இன்று பாராளுமன்ற உறுப்பினர்களாக வலம் வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் தான் இன்று அரசு விடுதலைப்புலிகளின் தலைவர் உள்ளிட்ட அவ் அமைப்பின் உறுப்பினர்களை புகைப்படங்களாக சமூக ஊடகங்களில் வெளியிடுபவர்களை கைது செய்வோம், தடை செய்வோம் என்கிற நோக்கில் செயற்படுவதானது இவர்கள் கூறும் ஜனநாயக நாட்டின் இறைமைக்கு எதிரானது. ஊடக சுதந்திரத்தின் மீதான அடக்குமுறைகளையே இவ் செயற்பாடுகள் வெளிக்காட்டுகிறது. உலகிலுள்ள அதிபயங்கரவாத அமைப்புக்கள் பற்றி இன்றும் உலக பத்திரிகைகளில், சமூக வலைதளங்களில் ஊடகச் செயற்பாட்டாளர்கள் பலர் எழுதியே வருகின்றார்கள். தீவிரவாதிகள் தொடர்பாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் மாத்திரம் இன விடுதலையாளர்களை தடை செய்வது ஏன்? அரசின் இவ்வாறானசெயற்பாட்டை,மனித உரிமைகளை மீறுகின்ற, தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையின் மற்றுமொரு வெளிப்பாடாகவே நாம் இதனைப் பார்க்கிறோம். அத்துடன் சிறுவர்கள் மத்தியில் எதிர்காலச் சந்ததியினருக்குக் கூட விடுதலைப்புலிகள் தொடர்பான விடயங்களை தெரியப்படுத்தக் கூடாது என்பதில் அரசாங்கம் குறியாக இருக்கிறது என்பதுவே அர்த்தமாகும். பிரபாகரன் என்கிற ஒருவர் வாழ்ந்ததற்கான ஆதாரங்களையேஅழித்தொழிக்க வேண்டும் என்பதுவே அவர்களின் நோக்கம். மீண்டும் வன்முறைகளைத் தூண்டுகின்ற நடவடிக்கைகளையே இவ்வரசு மீண்டும் ஏற்படுத்துகின்றது.

இந்நாட்டிலே போராட்டங்கள் சிங்களப் பேரினவாதிகளால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. தமிழினம் விருப்பமாக தம் தோள்களில் ஆயுதங்களை ஏந்தவில்லை. சிங்கள பேரினவாதிகளின் அடக்குமுறைகளின் உச்சக்கட்டம் தான் விடுதலைப் புலிகளது போராட்டம் உருவாகக் காரணமாக அமைந்தது.

மறைந்த மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் அருட்திரு இராயப்பு யோசேப் அவர்கள் உலகறிய இந்நாட்டில் இனப்படுகொலை நடந்தது, அந்த இனவழிப்பில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் சிங்கள அரச படைகளால் கொலை செய்யப்பட்டார்கள் என சாட்சியமாகப் பதிவு செய்திருந்தார். அரசின் இந்த தடையை எதிர்த்து பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் தமிழ்த் தரப்பினர் மௌனிகளாக இருப்பதும் வேடிக்கைக்குரியது. அரசை எதிர்த்துக் குரல் கொடுக்க முடியாத அளவிற்கு அவர்களின் செயற்பாடுகள் இருக்கிறது. விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்துசென்ற கருணா - பிள்ளையான் இன்னும் பலர் கூட அரசின் இவ்வாறான தடையுத்தரவுகளுக்கு, ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தவறியிருக்கின்றனர். மறுபக்கம் இவர்கள் இன்று அரசுடன் இணைந்துதான் செயற்படுகின்றனர்.

பிரபாகரன் என்பவர் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் என்பது அனைவருக்கும் தெரியும். அதுபோல சிறி சபாரத்தினம், பாலகுமார், சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், டக்ளஸ் தேவானந்தா போன்றோர் எந்த ஆயுதக் குழுக்களுக்குத் தலைமை தாங்கியவர்கள் என்பதெல்லாம் அனைவருக்கும் தெரியும். இவ்வமைப்பில் இருந்து மரணித்தவர்களை நினைவுகூரல் செய்ய முடிகின்றது. இதற்கு அரசு அனுமதித்திருக்கிறது. ஆனால் விடுதலைப்புலிகள் அமைப்பின் மாவீரர்களையே இவ்வரசு தடைசெய்திருக்கிறது. சிங்கள மக்கள் விடுதலைப்புலிகளுடன் போராடித்தான் தமது இராணுவத்தினர் மரணித்தனர் என்ற ரீதியில் தான் நினைவு தினங்களை இன்றும் அனுஸ்டித்து வருகின்றனர்.

சிங்களத் தரப்பினர் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருக்கக்கூடாது, விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால ஆட்சியை வழங்கியிருக்கக்கூடாது, அவர்களை அழைத்து உள்ளூரில் பேச்சுக்களை நடத்தியிருக்கக் கூடாது. அரசில் அங்கம் வகித்தவர்கள் விடுதலைப் புலிகளுடன் புகைப்படங்கள் எடுக்கலாம், பெயர்களை உச்சரிக்கலாம். முழுத் தவறையும் செய்தவர்கள் அரச தரப்பினர். ஆனால் ஒரு பொதுமகன் புகைப்படங்களை வைத்திருப்பதையும், பேசுவதையும் தான் அரசு தடுக்கிறது. ஒரு நாட்டில் தனக்கு விருப்பமான ஒருவரது புகைப்படத்தை வைத்திருக்க, சமூக வலைதளங்களில் பதிவிட, எழுத அரசு தடைசெய்கிறது. இது எல்லாம் எந்தமாதிரியான கோமாளித்தனமான சட்ட திட்டங்கள் என்று புரியவில்லை.

உண்மையில் பிரச்சினை நாட்டில் இருக்கக்கூடியவர்களால் அல்ல, ஆயுதப்போராட்டத்தில் பங்கெடுத்தவர்களால் அல்ல. பிரச்சினை எங்கு இருக்கின்றது எனில் பூகோள ரீதியாகத்தான். விடுதலைப்புலிகள் அமைப்பு கடல் வான் தரை என பாரிய கட்டமைப்பாக தனிநாடாக வளர்ச்சிபெற்றால் அது தமக்குப் பாதகமாக அமைந்துவிடும் என தனது நலனைப் பார்த்தது இந்தியா.

11ஆம் பக்கம் பார்க்க...

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

### தொடரும் அரசின் அடக்குமுறைகளும், கேள்விக்குறியுடன் தமிழினத்தின் எதிர்காலமும்

இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு இன்றுவரை இலங்கையை ஆட்சி செய்த, ஆட்சி செய்கின்ற சிங்கள ஆட்சியாளர்களால் தமிழினம் வகைதொகையின்றி படுகொலை செய்யப்பட்டதும், காணாமல் ஆக்கப்பட்டதும், சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டதும், உடைமைகளை இழந்ததும் இன்றுவரை தொடர்கின்றதே ஒழிய, தமிழ் பேசும் மக்கள் இந்நாட்டில் சிங்களப் பெரும்பான்மைச் சமூகத்தால் எதிர்கொண்ட, தொடர்ந்து எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்காக சர்வதேச மற்றும் உள்ளூர் ரீதியாக இதுவரை காலமும் தீர்வு காணப்படவில்லை. வெறுமனே காலம் வீணாக இழுத்தடிக்கப்படுகின்றது. வருடா வருடம் பேச்சுவார்த்தைகள் நடத்துவதும், கூட்டங்களைக் கூட்டித் தீர்மானங்களை நிறைவேற்றுவதும் நடக்கிறது. பேச்சுக்களாலும் தீர்மானங்களாலும் எவ்வித பயனும் தமிழினத்திற்கு இதுவரை ஏற்படவில்லை.

தமிழர் வாழ் பிரதேசங்கள் தொடர்ச்சியாக நன்கு திட்டமிடப்பட்டு அரச கைக்கூலிகளின் உதவியுடன் அபகரிக்கப்பட்டு வருகின்றது. தமிழினத்தின் இருப்பு என்கிற விடயம் இங்குதான் கேள்விக் குறியாக்கப்படுகின்றது. ஒரு இனம் நிலத்தை இழந்தால்?. இது இன்று நேற்று மாத்திரம் நடக்கவில்லை. இலங்கையை இதுவரை ஆட்சிசெய்த ஆட்சியாளர்களால் தொடர்ச்சியாக நடந்துவருவது. தமிழினம் தமது விடுதலைக்காக கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக அஹிம்சை - ஆயுத ரீதியாகப் போராடி வந்தது. அந்த ஆயுதப் போராட்டங்கள் முற்றாக இல்லாதொழிக்கப்பட்ட நிலையில் இன்று அஹிம்சை ரீதியானப் போராட்டங்கள் மாத்திரமே வடகிழக்கில் அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து 11 வருடங்களைக் கடந்துள்ள நிலையிலும் தமிழ் மக்கள் சந்தித்த கொடுமைகளுக்கு சர்வதேசத்திடமும், இலங்கை அரசிடமும் தீர்வினைக் கோரி அஹிம்சை வழியில் போராடி வருகின்றனர். தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் அதிகரிக்கின்றதே தவிர முற்றுப் புள்ளியிடவேண்டும் என அரசும் சர்வதேசமும் நினைக்கவில்லை. இந்நிலையில் தான் திடீரென சீருடை விவகாரம் தொடர்பில் யாழ் மாநகர முதல்வர் மணிவண்ணன் அவர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலையாகியுள்ளார். அரசின் இவ்வாறான விடயங்கள் எல்லாம் எமக்கு ஒன்றை மாத்திரம் கூறுகிறது. அதாவது, தமிழ் மக்களை தொடர்ந்தும் அடக்கியாள்வதே எமது பிரதான நோக்கம் என்பதுவே அது. ஏனெனில் அடிக்கடி தமிழ் மக்களை வன்முறை நோக்கியே அரசின் செயற்பாடுகள் இழுத்துச் செல்வதை நாம் காண்கிறோம். அரசு வன்முறையினை இலங்கையில் வைத்திருக்கவே விரும்புகிறதா என்கிற கேள்வி இயல்பாக எழாமலில்லை. ஆக தமிழினம் எவ்வாறு ஒரு கட்டமைப்புக்குள் கட்டுக்கோப்புடன் தமது இலட்சிய பயணத்தை ஆரம்பித்து பயணித்தார்களோ, அந்தப் பயணத்தின் வழியில் மீண்டும் பயணிக்க ஒரு புதிய கட்டமைப்பு உடனடியாக உருவாக்கப் படவேண்டும் உலக நாடுகளில் பரந்து வாழும் தமிழ் மக்களுடன் இணைந்து. தமிழினத்தின் இக்கட்டமைப்பு மீண்டும் சாத்தியமெனில் எல்லாம் கைக்கெட்டும் தூரம் தான்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

## 144

இவை தாக்கப்பட்டுள்ள விதத்தின் பிரகாரம், அரச படைகளது கவச வாகனங்களின் மீது ஆர்.பி.ஜி இலிருந்தும் ஆர்.பி.ஒவிலிருந்தும் கூடுதலான சமயங்களில் மேற்கொள்ளப்பட்ட சூடுகள், மிகவும் வசதியான இடத்திலிருந்து ஒன்றன்பின் ஒன்றான (படிக்கட்டுச்) சூட்டு முறையில் சுடப்பட்டுக் கிட்டத்தட்ட நேரெதிரே தாக்கியுள்ளன. தாக்கியழிக்கப்பட்ட கிட்டத்தட்ட ஒவ்வொரு ராங்கியின் அல்லது பி.எம்.பி இன் உடல் பகுதியில் கூடுதல் எண்ணிக்கை கொண்ட (மூன்றிலிருந்து ஆறு வரை) துளைகள் காணப்பட்டன. இதன் பிரகாரம், தெருச்சண்டைகளில் கவச வாகனங்களைத் தாக்கியழிப்பதற்காகக் கூடிய செறிவில் சூடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவென்பது தெளிவாகின்றது. எறிகணையாளர்கள் முதலாவதாக வருகின்ற வாகனத்தையும் இறுதியில் வருகின்ற வாகனத்தையும் தாக்குவதன் மூலம், ஒடுக்கமான வீதிகளில் கவச வாகனத் தொடரணியின் நகர்வைத் தடைப்படுத்தினார்கள். நகர்வில் தடைப்பட்ட ஏனைய வாகனங்கள் போராளிகளுக்கான சிறந்த இலக்காக மாற்றங்கண்டன. போராளிகள் ஒரேநேரத்தில் சூடுகளைப் பல எறிகணை செலுத்திகளிலிருந்து, அத்திவாரக் கட்டடங்களின் அரைநிலக்கீழ்நின்றும் (செலுத்துநரையும் வாகனத்தின் முன்பகுதியையும் தாக்குவதற்காக) கட்டடங்களின் மேல் மாடிகளிலிருந்து (இலக்கின் மேற்பகுதியைத் தாக்குவதற்காக) மேற்கொண்டார்கள். பி.எம்.பி, பி.ரி.ஆர் போன்றவற்றின் மீது எறிகணையாளர்கள் சுடும்போது, வாகனத்தின் உடற்பகுதியே நேரடியாகத் தாக்கப்பட்டது. எரிபொருள் கொள்கலன்களைக் கொண்டிருக்கின்ற இடங்கள் ராங்கியெதிர்ப்புத் தடந்தொடரில் எறிகணைகள், எறிகணைகள், மோட்டார்கள் போன்றவற்றின் மூலம் தாக்கப்பட்டன. ஆனால், வாகனத்திற்குக் கீழ் தொங்கிக்கொண்டிருக்கின்ற எரிபொருள் கொள்கலன்கள் சுடுகலன் சூடுகளால் தாக்கப்பட்டன.

ஓகஸ்ட் மாதம் 1996 ஆம் ஆண்டில் குறோஸ்னி நகருக்கான சமரின்போது, அரச படைகளுக்குச் சொந்தமான, புகையிரத நிலையப் பாதையொன்றில் தரித்து நின்ற புகையிரதப்பெட்டி எதிர்ச்செயற்பாடு ராங்கியெதிர்ப்பு எறிகணையினுதவியுடன் போராளிகளால் தாக்கப்பட்டது. இதனது விளைவுகள் பற்றித் தெரிவிப்பது தாமதப்படுத்தப்பட்டது. ஒரு வாரத்திற்குக் குறைந்த சமர்களில் செச்னிய வீரர்கள் 50இற்கு மேற்பட்ட ரசியக் கவச வாகனங்களை அழித்தனர். இச்சமர்களில் 205ஆவது மோட்டார்த் தாக்குதல் பிரிகேட்டுக்கு மாத்திரம் ஏற்பட்ட இழப்பு விபரம் : கிட்டத்தட்ட 200 வீரர்கள் கொல்லப்பட்டனர், 500 வரையானோர் காயமடைந்தனர். இவ்வாறாக, பிரிகேட்டின் மொத்த ஆளணியிலிருந்த 3500 பேரில், செச்னியாவின் தலைநகரில் நடந்த மூன்று வாரச் சமரின் பின் ஒவ்வொரு ஐந்து பேரில் ஒருவர் என்ற விகிதத்தில் இழக்கப்பட்டிருந்தனர். இச் சமரின்போது அரச படைகளின் இராணுவ வீரர்கள் 520 பேர் கொல்லப்பட்டிருந்தனர். 1264 பேர் காயமடைந்திருந்தனர். செச்னியாவில் 21 மாதங்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட சமர் நடவடிக்கைகளில் (டிசம்பர் 1994 தொடக்கம் ஓகஸ்ட் 1996 வரை) அரச படைகளின் இழப்பு பின் வருமாறாகும். 4103 பேர் கொல்லப்பட்டனர். 19794 பேர் காயமடைந்தனர், 1231 பேர் காணாமல் போயிருந்தனர். ("சார் ஜண்ட்" இல.2.1997 என்ற சஞ்சிகையில் வெளியான கட்டுரையிலிருந்து)



### கெரில்லாப் போராட்டத் தந்திரோபாயம் முஜாகுதீன்களுக்கான அறிவுறுத்தல்கள்

(ஈரானில் தயாரப்படுத்தப்பட்ட ஆப்கானிஸ்தானிய முஜாகுதீன் களுக்கான சுருக்கிய ஒழுங்குவிதிக் குறிப்பு)

கெரில்லாப் போரின் இலக்கு

கெரில்லாப் போரின் இலக்கு - ஒரு நாட்டு மக்களால் அவர்களது நிலப்பரப்பைக் கைப்பற்றிய எதிரிக்கெதிராக எதிர்ப்பை வெளிக்காட்டுவதாகும்.

வெடிகுண்டு வைக்கும் வேலைகளால், கூடியளவு எண்ணிக்கையிலான படையின் உதவியுடன் எதிரி தன்னைக் காத்துக்கொள்ளவும் தனது ஊடகங்களைப் பிரயோசனமற்ற முறையில் செலவழிக்கவும் அவனைக் கெரில்லாக் குழுக்கள் நிர்ப்பந்திக்கின்றன. கெரில்லாப் போரில் ஆட்கொள்ளப்பட்டுள்ள பிரதேசத்தில் பின்வருமாறு செயற்படவேண்டும். அதாவது, எதிரியை எந்நேரமும் பய உணர்வு பற்றிக்கொள்ளும் வகையிலும் அப்பிரதேசத்தில் அவன் ஆயுதமின்றி சாதாரணமாக நடமாட முடியாதவாறும் வைத்திருக்கவேண்டும்.

கெரில்லாக்களின் செயற்பாட்டு அடிப்படைகள் :

இராணுவமும் காவற்றுறையும் இருக்கின்ற இடங்களில் அவற்றின் ஆளணிகளை அழித்தல்.

வாகனப் பாதைகளையும் புகைவண்டிப் பாதைகளையும் எதிரிப் படைகள் பயன்படுத்துவதைத் தடைப்படுத்துவதற்காக அங்கே நாசகார வேலைகளை மேற்கொள்ளல்.

தொலைபேசித் தொடர்புக் கம்பிகள், (தொங்குகின்ற, நிலத்திற்குக் கீழால் செல்கின்ற) நடுவகத் தொடர்பு நிலையங்கள்,வானொலிநிலையங்கள் போன்றவற்றைக் கைப்பற்றல் அல்லது அழித்தல்.

வலு வலையமைப்புக்கள், மின்சார நிலையங்கள் போன்றவற்றிற்கெதிராக நாசகாரவேலை மேற்கொள்ளல்.

எதிரியின் மத்திய கட்டளையகத்தை நிர்மூலமாக்குதல் (அழித்தல்).

போக்குவரத்து ஊடகங்களை (இராணுவ, வழக்கமான) அழித்தல் அல்லது கைப்பற்றல்.

எதிரியின் தொடர்பாளர்களையும் முகவர்களையும் அழித்தல்.

கெரில்லா அமைப்பின் சிறப்பம்சங்கள்

உள்ளூர்வாசிகள் தமக்குத் தேவையான பொருட்களைக் கடைகளில் மாத்திரம் அல்லது தமது சொந்த உற்பத்தி மூலம் பெற்றுக்கொள்கின்றார்கள். ஆனால், கெரில்லாக்களின் வாழ்க்கையோ போராட்டத்துடன் தொடர்புபட்டதாக இருக்கின்றபடியால், அவர்கள் தமது தேவைகளை எதிரியிடமிருந்து கைப்பற்றும் பொருட்களினால் நிவர்த்தி செய்கின்றனர்.

அவசியம் நினைவிற் கொள்ளவேண்டிய விடயம் யாதெனில், ஒழுங்குபடுத்தப்படாத மக்கள் கூட்டம் இராணுவப் படைப் பிரிவுகளுக்கெதிரான சமரில் தோல்வியைச் சந்தித்திருக்கின்றது. சந்திக்கும். ஆகவேதான், கெரில்லாக் குழுக்களின் செயற்பாடுகளில் இறுக்கமான ஒழுங்கமைப்பு வேண்டப்படுகின்றது.

கெரில்லாக் குழுக்கள் தமது சகல செயற்பாடுகளின்போதும் தங்களுக்கிடையில் அறிவுரைகளைப் பரிமாறவேண்டும். அவர்களது செயற்பாடுகள் ஒருமித்ததாக இருக்கவேண்டும். மூத்த அனுபவமுள்ள வழிநடத்துநர்களின் அறிவுரைகளுக்கும் பரிந்துரைகளுக்கும் செவிசாய்க்கவேண்டும்.

வெவ்வேறு வகைப் படைகளில் பணியாற்றிய, அதற்குரிய நிபுணத்துவம் கொண்ட இராணுவப் பணியாளர்களை அவசியம் கெரில்லாப் போராட்டத்தினுள் உள்வாங்கி, பயன்படுத்தவேண்டும். நீண்ட கெரில்லாப் போராட்டத்தில் கெரில்லாக்கள் மக்களின் வெவ்வேறான நலன்களைக் காக்கவேண்டும். அப்படித் தவறுடத்து, மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றதுடன், கெரில்லாக்களால் மக்கள் மத்தியில் ஆதரவைப் பெற்றுக்கொள்ளவும் முடியாமல் போகின்றது. இதன் விளைவாகக் கெரில்லாக்கள் தோற்கடிக்கப்படுகின்றனர்.

தொடர்வான்...

# மியன்மாரைப் போன்ற இராணுவப் புரட்சி இலங்கையிலும் ஏற்படுத்தப்படுமா?




மியன்மாரைப் போல இலங்கைத் தீவை மாற்றுவதற்கான முயற்சிகளையே இந்த பௌத்த பேரினவாதிகள் மேற்கொண்டு வருகிறார்கள். தற்போது ஆட்சியிலிருக்கும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவினர் இந்நாட்டின் அனைத்துத் துறைகளிலும் இராணுவத்தை உட்புகுத்தி அவர்களுக்கு உயர் பதவிகளை வழங்கி இராணுவ ஆட்சியினை இந்நாட்டில் தொடர்ந்தும் தக்கவைப்பதற்கான வேலைத்திட்டங்களை செய்து வருகின்றார்கள். ஜனநாயகத்திற்கு முரணான இவ் இராணுவத் தலைமையீடுகள் சர்வதேச ரீதியாக இலங்கையரசிற்கு பிரச்சினைகளையே ஏற்படுத்தியுள்ளது. உள்ளூரிலும் சர்ச்சைகளை தோற்றுவித்துள்ளது.

மியன்மாரிலும் இராணுவப் புரட்சி ஒன்றின் மூலமாக ஆட்சி கவிழ்க்கப்பட்டு இராணுவ ஆட்சியே தற்போது மியன்மாரிலும் நடைபெற்று வருகின்றது. அனைத்துத் துறைகளும் இராணுவ வசமாகியுள்ளதுடன், ஆட்சியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதே பாணியில் இலங்கையும் நகர்ந்து செல்வதை நாம் இன்று காணக்கூடியதாகவிருக்கிறது. மியன்மாரைப் போன்று இலங்கையிலும் ஒரு இராணுவப் புரட்சி ஏற்படுமாகவிருந்தால் மீண்டும் இந்நாட்டில் யுத்தம் உருவாகுவதற்கான வாய்ப்புக்களே அதிகம் இருக்கிறது. இவ்வாறான இவர்களது செயற்பாடுகள் தமிழர்களுக்குச் சாதகமாக அமையும் என்பதும் உண்மை. இதனால் தமிழீழத்திற்கான பலம் அதிகரிக்கும்.

இன்று இந்நாட்டுக்குள் யுத்தம் நிறைவடைந்து சமாதானம் என்கின்ற ஒரு நிலையில் இந்நாடு பயணிக்க, தமிழினம் விழிப்புணர்வுடன், அவதானமாகச் செயற்படவேண்டிய நிலையில் இருக்கிறது. முன்னரைவிட தற்போது தமிழர் வாழ் பகுதிகள் பறிபோய்க் கொண்டிருக்கின்றன. இராணுவப் பிரசன்னம் வடகிழக்குப் பகுதிகளில் அதிகரித்திருக்கிறது. பௌத்த விகாரைகளின் எண்ணிக்கை தமிழர் பிரதேசங்களில் அதிகரித்திருக்கிறது. தமிழர்களின் வணக்கஸ்தலங்கள் பறிபோகும் நிலையில் உள்ளது. தொல்பொருள் ஆராய்ச்சிகள் என்கிற போர்வையில் நில அபகரிப்புகள் அதிகரித்திருக்கிறது.

அரசு தமிழ் மக்களுக்கான தீர்வினை வழங்குவதன் ஊடாக இந்நாட்டில் இனங்களுக்கிடையில் ஒரு பரஸ்பர சுமுகமான உறவினைத் தோற்றுவிக்க முடியும். மியன்மார் பிரச்சினை முஸ்லீம்களுடன் தொடர்புபட்டது. ஜனநாயக ரீதியாகப் போராடிய மக்களது போராட்டம் தோற்கடிக்கப்பட்டு மக்கள் இன்று நிர்க்கதியாக்கப்பட்டுள்ளதுடன், இராணுவப் புரட்சியும் ஏற்பட்டுள்ளது. இன்று அங்கு மக்களது பாதுகாப்பு, நாட்டின் பாதுகாப்பு என்பன கேள்விக்குறியாகியுள்ளதுடன் அந்நியநாடுகளின் தலையீடுகளும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இது ஆபத்தான நிலை.

இந்தியா தமது தேவைக்காக தமது பூகோள அரசியலுக்காக ஈழத்தமிழர்களைப்பயன்படுத்தியே வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளது ஒரு அங்கம். தமிழர்களுக்கான ஒரு அரசியல் சார்ந்த கட்சி. இவர்களுக்கான அதிகாரம் இன்று இந்நாட்டில் போதியதாக இல்லை. இவர்களின் குரல் மழுங்கடிக்கப்படுகின்றது. தமிழர்களுக்கான தீர்வை தொடர்ந்தும் இவ்வரசும் வழங்காமல்விட்டால் எதிர்வரும் காலங்களில் நிலைமைகள் மோசமானதாகவே இருக்கும்.

இலங்கையை ஆட்சி செய்த அனைத்து ஆட்சியாளர்களின் காலப்பகுதிகளிலும் தமிழர்கள் வகைதொகையின்றி படுகொலை செய்யப்பட்டே வந்திருக்கிறார்கள். இலங்கையில் ஒரு இராணுவப் புரட்சி ஏற்படுமாகவிருந்தால் இந்தியா இலங்கையில் நேரடியாகக் கால்பதிக்கும் நிலை ஏற்படலாம். அமைதிப்படை என்கிற பெயரில் இந்நாட்டுக்குள் நுழைந்த இந்திய இராணுவம் செய்த அட்டூழியங்களை உலகமே அறியும். இராணுவப் புரட்சிகளின் மூலமாக அந்நிய சக்திகள் குறித்த நாடுகளுக்குள் ஆழமாக கால்பதிப்பதற்கான வாய்ப்புக்கள் தான் கடந்த காலங்களில் அதிகரித்திருக்கிறது என்பது தான் வரலாறு. இன்று இந்நாட்டின் பெயரை மாற்ற வேண்டும் என சில பௌத்த துறவிகள் களமிறங்கியிருக்கிறார்கள். இவ் வகையான கருத்துக்கள் மீண்டும் இனங்களுக்கிடையில் மோதல்களைத் தான் உருவாக்கும்.

ஆகவே இவர்களது செயற்பாடுகள் நன்கு திட்டமிட்டவைகளாகவே கருதப்பட வேண்டியவை என்பது தெளிவாகிறது. தொடர்ந்தும் இந்நாட்டை போர்க்களமாக வைத்திருக்கவே சிங்கள இனவாதிகள் விரும்புகிறார்கள். மியன்மாரில் ரோஹிங்கிய முஸ்லீம் மக்களை மனிதாபிமானமற்ற முறையில் விரட்டியடித்ததைப் போலவே இவ் சிங்களப் பேரினவாதிகளின் செயற்பாடுகளும் மாற்றமின்றி இன்றும் தொடர்கின்றது என்பதற்கு 'சிங்களே' என்ற சொற்பதமே போதுமானதாகவிருக்கிறது. பெரும்பான்மை இனம் தொடர்ந்தும் சிறுபான்மை சமூகங்களை அடிமைகளாக வைத்திருக்கவே விரும்புகிறது. சிறுபான்மை சமூகங்கள் பேச்சுவார்த்தைகளை மூன்றாம் தரப்பின் உதவியுடன் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் ஆரம்பிக்கவேண்டும். தமிழ்மக்களுக்கான தீர்வுகள் உரிய முறையில் வழங்கப்படவேண்டும். வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகம் தொடர்பில் இன்னும் ஆழமாக கலந்துரையாடப்படவேண்டும்.

மியன்மாரைப்போன்று இராணுவப் புரட்சியினை இங்கும் ஏற்படுத்த சிங்கள இனவாதிகள் பௌத்த துறவிகளையும் தூண்டிவிட்டுள்ளார்கள். சீனா, இந்தியா, அமெரிக்கா தற்போது இலங்கை மீது குறிவைத்துள்ளன. கடந்த காலங்களில் பொதுபல சேனா, ராவணபலய போன்ற அமைப்புக்களை உருவாக்கி தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட வைத்தார்கள்.

மியன்மாரில் எவ்வாறு ஜனநாயக ஆட்சி கவிழ்க்கப்பட்டு இன்று அவர்கள் சிறை வைக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்நாட்டு மக்கள் இதில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதே நிலை இங்கும் தொடர்ந்தால் மீண்டும் வன்முறைகள் உருவாகும்.

அதிகாரப் பகிர்வின் ஊடாக இந்நாட்டு மக்கள் மகிழ்ச்சியாக வாழலாம். இதற்கான வழிவகைகளை அரசு ஏற்படுத்தவேண்டும். பிரிவினைவாதத்தை ஒழிக்க வேண்டும். இனவாதம் பேசுபவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். தமிழ் பேசும் மக்களாகிய நாம் இனவாதக் கருத்துக்களை கூறுபவர்களிடத்திலிருந்து அவதானமாக இருக்கவேண்டும். எமது இலட்சியம் நோக்கிப் பயணிக்க எதிர்காலத்தில் ஒற்றுமையும், அஹிம்சை ரீதியானப் போராட்டங்களும் வலுப்பெறவேண்டும்.



**சுழியோடி**

# ஜெனீவா விவகாரங்களில் உலக நாடுகளின் கண்துடைப்பு

இலங்கை அரசு உள்நாட்டில் செயற்படுகின்ற மனித உரிமைச் செயற்பாட்டாளர்களை விரும்பவில்லை. அவர்களை இல்லா தொழிக்கவேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டு வருகின்றது. எங்கு என்ன சம்பவம் நடந்தாலும் சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களுக்கு எதிராகவே இதுவரை செயற்பட்டு வருகிறார்கள். தமிழ் மக்களும் தமிழ் அரசியல் பிரதிநிதிகளும் இதனை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். சிங்களக் கட்சிகள் தமக்கிடையேஒருநிகழ்ச்சிநிரலை உருவாக்கிக்கொண்டு அதன்படி செயற்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே தமிழினம் தமிழ்த் தரப்பிற்கே ஆதரவை வழங்கவேண்டிய தேவை இருக்கிறது.



இந்தக் காலகட்டத்தில் நாம் மற்றொரு ஆயுதப்போராட்டம் பற்றிச் சிந்திக்காது, அஹிம்சை ரீதியிலானப் போராட்டங்களை ஜனநாயக ரீதியாக முன்னெடுக்கவேண்டிய தேவை யும் இருக்கிறது. தற்போது அஹிம்சை ரீதியானப் போராட்டங்கள் தமிழினத்தால் முன்னெடுக்கப்பட்டாலும் அதற் கெதிராக அரசு சதிவேலை களைச் செய்துவருகின்றது. எனி னும் தடைகளை மீறி அஹிம்சை ரீதியிலானப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் கொலை செய்யப்பட்டவர்களின் விபரங்களைத் திரட்டி, கடத்தப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்டவர்களது விபரங்களையும் சர்வதேச அளவில் தெரியப்படுத்துவதன் ஊடாக இந்நாட்டில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் பற்றியும் நிரூபிக்கவேண்டிய தேவை தமிழ் அரசியல் தலைமைகளுக்கு இருக்கின்றது.

தமிழ் அரசியல் தலைமைகள் ஒத்த அரசியலைச் செய்வதன் ஊடாக சில விடயங்களைச் செய்ய முடியாமல் இருக்கின்றது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பானது ஐ.நாவின் காலக்கெடு என்பதற்கு இணங்கியதே மிகப்பெரிய தவறு. இச்சந்தர்ப்பத்தைப்பயன்படுத்திய இலங்கையரசு கச்சிதமாக தம்மைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைச் செய்து முடித்துள்ளது. எங்களது உரிமைப்போராட்டம் தொடர்பில் ஐ.நாவில் பேசவேண்டிய தேவை இருக்கிறது. ஐ.நாவும் ஆசிய நாடுகளும் ஐரோப்பிய நாடுகளும் தமிழ் மக்களது விடுதலைக்கானப் போராட்டத்தில் தவறிழைத்து விட்டனர் என்றுதான் கருதமுடிகின்றது. காரணம் என்னவெனில் நாம் தொடர்ந்தும் சர்வதேசத்தை நம்புகின்ற விடயத்தை விட்டுவிட்டு எமக்கு நடந்த அநீதிகளை நாம் நிரூபிக்கும் வகையில் செயற்படவேண்டும். திரைமறை வில் தான் சில விடயங்களை நாம் செய்துகாட்டவேண்டியிருக்கிறது.

கோழி கொக்கரிப்பதுபோல சில விடயங்களைச் செய்கின்ற போது மீண்டும் பிரச்சினைகள் எம்மைநோக்கியே வருகின்றது. இலங்கையினுடைய ஆட்சி யாளர்கள் ஒவ்வொருவரும் ஒரே அச்சில் வார்த்ததைப்போல் தான் இருக்கிறார்கள். அவர்களது செயற்பாடுகளில் மாற்றங்கள் இல்லை. தேர்தல் காலங்களில் பசப்புவார்த்தைகளைக் கூறி வாக்கு சேகரிக்கிறார்கள். ராஜபக்ஷவின் புதல்வர்களுக்கு இனி இந்நாட்டில் இடமில்லை என்று இருக்கின்றபோது, நன்கு திட்டம் தீட்டப்பட்டு, திடீரென ஒரு கலவரம் உருவாக்கப்பட்டு தமிழ் பேசும் முஸ்லீம் மக்களையும் எதிரிகளாக்கி ஆட்சியை மீண்டும் ராஜபக்ஷவின் புதல்வர்கள் பிடித்துள்ளனர். இவர்களும் இன்று பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்படுகின்றார்கள். தொடர்ந்தும் இந்த நாட்டில் பயங்கரவாதம் இருக்கிறது என்று சர்வதேசத்திற்கு கூறிக்கொண்டு ஒரு இனத்தின் மீது இந்நாட்டில் போராட்டம் இடம்பெற்றது என்று கூறமுடியாத அளவிற்கு சர்வதேச ரீதியாக சில அழுத்தங்களை இந்த அரசாங்கம் கொடுக்கிறது.

ஆகவே விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அல்ல என்கின்ற வழக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப் படவேண்டும். இலங்கையில் அவர்களுக்கான ஒரு அங்கீகாரம் வேண்டும். அதற்கான அவசியம் இருக்கிறது. அவர்கள் பயங்கரவாதிகள் அல்ல. அரச தரப்பினரே சர்வதேச ரீதியான பேச்சுக்களில் விடுதலைப் புலிகளுடன் கலந்து கொண்டவர்கள். காலத்தின் தேவை கருதி அந்த அடிப்படையில் நாம் சில விடயங்களை முன்னெடுத்துச் செல்லவேண்டும். இதன் மூலமாக தமிழ் மக்களுக்கான தீர்வுகளைப் பெறலாம். எமக்கு எதிராக செயற்படுகின்றவர்களை எதிர்க்கக்கூடிய சக்திகளை நாம் உருவாக்கவேண்டும்.

இஸ்ரேல் என்கிற நாடு சிதறடிக்கப்பட்டு பின்னர் வலுவாக உலக ரீதியாக எவ்வாறு மீண்டும் கட்டமைக்கப்பட்டதோ அவர்களிடமிருந்து நாம் பாடம் கற்கவேண்டும். தமிழர்களும் உலக நாடுக ளில் பரந்து வாழ்கின்றார்கள். இவர்கள் அனைவரும் மீண்டும் ஒன்றிணையவேண்டும். எமது எதிர்காலச் சந்ததியினருக்கும் எமது செயற்பாடுகள் கடத்தப்பட வேண்டும். இதைவிடுத்து தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்று பேசிப்பேசி காலத்தை வீணடிப்பது எமது இனத்தின் விடுதலையினைக் கேள்விக்குறியாக்கும்.

எமது போராட்டத்தை சர்வதேச நாடுகள் பார்த்துக்கொண்டுதான் இருந்தது. தெரியாதுஎன சர்வதேச நாடுகள் கூறிவிட முடியாது. ஆகவே இனப்படுகொலைக்கான ஆதாரங்கள் திரட்டப்பட்டு அதனை திறந்தவெளியில் காண்பிப்பதன் ஊடாக, ஒரு நாட்டை மத்தியஸ்தம் செய்து, எமக்கான கோரிக்கைகளை பலமாக முன்வைக்கவேண்டும். இனவாதம், மதவாதத்தை தூண்டுகிறவர்களை கைது செய்யவேண்டும். அரசிற்கு சார்பானவர்கள் தான் இனவாதிகளாக செயற்படுவதால் அவர்களை அரச தரப்பினர் கைது செய்வதில்லை. மஹிந்த, கோட்டபாயவின் ஆட்சிக் காலங்களில் மாத்திரம் தமிழ் மக்கள் கொலை செய்யப்படவில்லை அல்லது காணாமல்போகச் செய்யப்படவில்லை. இவர் களின் ஆட்சிக்கு முன்னரும் இதே சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அன்றிலிருந்து இன்றுவரை தமிழினத்திற்கான தீர்வுகள் வழங்கப்படவில்லை. இக்கொலை களுக்கான நீதி வழங்கப் படவில்லை. எமது போராட்டங்களை நாம் அஹிம்சைரீதியாக முன்னெடுக்க வேண்டும் அல்லது பலம் கொண்ட ஒரு நாட்டுடன் நாம் கைகோர்த்து இந்நாட்டுக்குள் செயற்படவேண்டும். இல்லை யெனில் சமாதான உடன் படிக்கைகள் மூலமாக தமிழினத்தின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். வன்முறை அல்லது அஹிம்சை - சமாதா னம் என்று தான் போகவேண்டும். இவற்றை விடுத்து வேறுவழியில்லை என்பதுவே நிதர்சனமான உண்மை.

**நெற்றிப்பொறியன்**

# காணாமல் ஆக்கப்படும் குளங்களும் வாழ்வாதாரத்தை இழக்கப்போகும் மக்களும்



இலங்கை நீர்வளம், நிலவளம், இயற்கை வளங்கள் நிறைந்த ஓர் அழகிய தீவு விவசாயத்தை அடிப்படை பொருளாதார கட்டமைப்பாக கொண்ட ஓர் நாடு. 1978க்கு முன்னர் விவசாய தன்னிறைவு பொருளாதார கட்டமைப்பைக் கொண்ட நாடாக வலம் வந்த நிலையில் 1978க்கு பின்னரான காலங்களில் திறந்தவெளி பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டு விவசாயத்துடன் கைத்தொழில் துறையும் சமாந்தர நிலையில் பயணிக்க தொடங்கியது. இலங்கையில் ஆரம்பகாலங்களில் ஆட்சி செய்த சிங்கள தமிழ் மன்னர்கள் விவசாயத்தை முன்னிறுத்தி பல குளங்களையும் சமுத்திரங்களையும் கட்டி வரலாற்றிலும் மக்கள் மனங்களிலும் நீங்கா இடம்பிடித்து இன்று வாழ்ந்துவருகின்றனர். இதில் குறிப்பாக 1ஆம் பராக்கிரமபாகு, 6ஆம் பராக்கிரமபாகு, மகா சேனன், வசபன், தேவநம்பியதீசன், எல்லாளன் போன்ற மன்னர்கள் பல அற்புதமான குளங்களையும், சமுத்திரங்களையும் கட்டி எமது நாட்டை நீர்வளம் உள்ள நாடாக மாற்றியமைத்தனர். இம் மன்னர்கள் வாழ்ந்த காலம் ஓர் பொற்காலமாக பார்க்கப்பட்டது. அம் மன்னர்கள் கட்டிய குளங்களை தவிர அதற்கு பின்னர் ஆட்சிகளுக்கு வந்த சிங்கள தமிழ் தலைமைகள் இவ்வாறான ஓர் குளத்தையன்றும் கட்டமுடியவில்லை. இருந்த பொழுதிலும் தென்பகுதியில் உள்ள பாரிய குளங்கள் சமுத்திரங்கள் அனைத்தும் மாறிமாறி வரும் அரசாலும் அங்குள்ள சிங்கள மக்களாலும் மிகவும் உள்ளார்ந்த மனதுடன் பாதுகாத்து வருகின்றனர். குளங்கள் தூர்ந்து போகாமலும் சமுத்திரங்கள் இடிந்து போகாமலும் மிகவும் உண்ணிப்பாக பாதுகாத்து அடுத்த தலைமுறைகளுக்கு நீரையும் விவசாயத்தையும் வழங்கி வருகின்றனர். இது உண்மையில் பாராட்டத்தக்கதும் போற்றத் தக்கதுமான விடயமாகும்.

வடகிழக்கில் பெரும்பாலானோர் விவசாயத்தை நம்பி தமது வாழ்வாதாரத்தை நடாத்தி செல்பவர்கள். இதில் நெற்பயிர்ச் செய்கை பிரதான பங்கை வகிக்கின்றன. நெற்பயிர்ச் செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்படும் இடங்களாக வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மாவட்டங்கள் காணப்படுகின்றன. இம் மாவட்டங்களில் அதிகளவான குளங்கள் காணப்படுகின்றன. இங்கு பெரும்போகம், சிறுபோகம் உட்பட மூன்று போகப் பயிர்செய்கையும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மூன்று போகப் பயிர்செய்கையானது குளங்களின் நீர் தன்மையை பொறுத்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வரட்சியான காலப்பகுதிகளில் குறிப்பாக மழைவீழ்ச்சி குறைவான காலப்பகுதிகளிலும் குளங்களில் காணப்படும் நீரால் மாவட்டங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு பெருமளவில் குறைக்கப்படுகின்றன. நிலத்தடி நீரைப் பாதுகாப்பதில் இக்குளங்களே முக்கிய பங்கு வகிக்கின்றன. அத்துடன் மாவட்டங்களின் பொருளாதார நிலைமையும்மக்களின் வாழ்வாதார நிலைமையும் தக்கவைப்பதில் இக்குளங்கள் மிகப்பெரும் பங்கு வகிக்கின்றன. நாட்டுக்கே சோறு போடும் விவசாயத்துக்கு ஆணித்தரமான பங்கு வகிக்கும் இக் குளங்களுக்கு தற்பொழுது சாவு மணி அடிக்கப்பட்டுவருகின்றது. குறிப்பாக வடகிழக்கு பகுதிகளில் உள்ள குளங்கள் மனிதம் என்ற போர்வையில் உலாவரும் அழிவிரும்பிகள் மேற்கொள்ளும் கபடத்தனமானது அற்ப பணத்தொகையும், சுயநலமும், பதவி வெறியும் என அனைத்தும் ஒருங்கிணைந்து குளங்களை கூறுபோட்டு விற்பனை செய்யும் இழி செயலை புரிந்து வருகின்றனர். ஆண்டாண்டு காலமாக பரம்பரை பரம்பரையாக பாதுகாத்து பேணிவந்த அழகிய குளங்கள் இன்று கபளிகரம் செய்யப்படுகின்றது. 40 ஆண்டுகால இன மோதல் உக்கிரமாக இடம்பெற்ற பொழுதிலும் பாதுகாக்கப்பட்ட குளங்கள் இன்று சில அரசியல் வஞ்சகம் கொண்ட குழுக்களால்சிதைக்கப்படுகின்றன. அண்மையில் வவுனியாவின் மிகப்பெரிய குளங்களில் ஒன்றும் மிகவும் பழமையான குளமாக காணப்படும் வவுனிக்குளம், இக்குளத்தை அடிப்படையாக கொண்டே வவுனியா என்ற பெயர் வரக் காரணமானது எனச்சொல்லப்படும்.

இவ்வாறான சிறப்புமிக்க குளம் சுற்றுலா கேளிக்கை நிகழ்வுக்காக மாற்றப்பட்டு வருவதைக் கண்டு விவசாய பெருங்குடி மக்கள் தொடக்கம் குளத்தையும் நீரையும் நேசிக்கும்மக்கள்போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். இக்குளம் ஆரம்பத்தில் நன்னீர் மீன் வளர்ப்புக்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டு வந்த நிலையில் தற்பொழுது வவுனியா நகரசபை குத்தகை அடிப்படையில் தனியார் நபர் ஒருவருக்கு சுற்றுலா களியாட்ட நிகழ்வுக்காக கொடுக்கப்பட்டுள்ள நிலையில் அனுமதிக்கப்பட்ட பகுதியைத் தாண்டி குளம் மூடப்பட்டு வருவதாகக் கூறி கடந்த சில தினங்களாக போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் சமூக ஆர்வலர்கள், மக்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் இச் செயற்பாட்டுக்கு ஆட்சேபனை தெரிவித்து வருகின்றனர். இச் செயற்பாட்டுக்கு யாரைக் குற்றம் சொல்வது. வவுனியாவில் ஓர் சுற்றுலா மையம் வருவது குற்றமா அல்லது வவுனியா நகர் அழகாக வருவது குற்றமா என சிலர் கேட்பது புரிகின்றது. வவுனியா நகர் அழகாக வர வேண்டும் அத்துடன் பொழுதுபோக்கு சுற்றுலா மையங்கள் வரவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் எமது பிரதேசத்தின் பொருளாதார நிலையாக உள்ளது விவசாயம். அவ் விவசாயத்தை மேற்கொள்ள உறுதுணையாக உள்ளது இந்தக் குளங்கள். அந்த வகையில் வவுனியாக் குளம் இவ்வாறு ஓர் அழிவு நிலைக்கு செல்வதானது கண்டிக்கத்தக்க விடயமாகும்.

குத்தகைக்கு எடுத்தனர். பல கோடி ரூபா முதலீடு செய்துள்ளதாக தெரிய வருகின்றது. இதற்கு முறைப்படி நகர சபையின் அனுமதியும் பெற்றுள்ளதாகத் தெரிய வருகின்றது. இதில் இரு தரப்பும் பிழையான விடயத்தை மேற்கொண்டு உள்ளனர். நகர சபையானது இக் குளத்தை இவ்வாறான செயலுக்கு வழங்குவதற்கு முன்னர் யோசித்திருக்கவேண்டும். குளத்தை பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் நகர சபைக்கு உண்டு. இவ்வாறான நிலையில் இக்குளத்தினை அற்ப பணத்துக்காக இவ்வாறு குத்தகைக்கு விட்டது முதல் தவறாகும் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். இரண்டாவது இக்குத்தகை எடுத்தவர் சற்று சிந்திக்கவேண்டும். பணத்தைப் போட்டு பணத்தை எடுப்பதற்கு குளம் ஒன்றும் தனியார் வியாபார நிலையம் இல்ல. அது பரம்பரை பரம்பரையான மக்களுக்கு சொந்தமானது. பறவைகள் மற்றும் விலங்குகளுக்குச் சொந்தமானது. விவசாயத்தையும் மீன்பிடித்தொழிலையும் விலங்குகளின் உயிர் வாழ்வையும் தீர்மானிக்கும் ஒரு சக்தியாக உள்ள நிலையில் அக்குளத்தில் தனது வியாபார செயற்பாட்டிற்கு மாற்ற முயற்சிப்பதானது மிகவும் சுயநலமான சமூக சிந்தனையற்ற அடுத்த தலைமுறைகளை யோசிக்காத ஓர் செயற்பாடாகவே பார்க்கப்படுகின்றது.

ஆகவே மனிதாபிமான அடிப்படையிலும் சமூக சிந்தனையுடனும் எதிர்கால சந்ததியினரின் வாழ்வாதாரத்தையும் குடிநீர் தட்டுப்பாட்டையும் கருத்திற் கொண்டு இவ்வாறான குளங்களை ஆக்கிரமிக்கும், குத்தகைக்கு வழங்கும் செயற்பாடுகளையும் நிறுத்தவேண்டும். குளங்களை பாதுகாப்பது எமது இருப்பைத் தக்கவைக்கும் என்பது கண்கூடு. வவுனியா மாவட்டம் மட்டுமன்றி பல மாவட்டங்களில் குறிப்பாக வடகிழக்கு மாவட்டங்களில் உள்ள குளங்கள் குடியேற்றங்களுக்காக அபகரிக்கப்படுவதும் மண் கொள்ளை, போன்ற செயற்பாடுகள் மற்றும் பழமைவாய்ந்த குளங்கள் புனரமைக்கப்படாமல் தூர் வாரப்படாமல் அழிவடைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

உலகின் காலநிலைமாற்றங்களால் நிலத்தடி நீரானது இல்லாமல் போகும் அபாய சூழ்நிலை உருவாகியுள்ள நிலையில், வெப்பம் அதிகரித்து செல்வதும், மழை வீழ்ச்சி குறைவடைந்து செல்வது தட்ப வெப்பமாற்றங்கள் என பெரும் இடரை மனித குலம் சந்தித்துக்கொண்டிருக்கும் நிலையில் இருக்கும் குளங்களை எல்லாம் இவ்வாறான செயல்பாடுகள் மூலம் அழிவடையவிட்டு, குடிநீரும் இன்றி விவசாயமும் இன்றி விலங்கு வளர்ப்புகளும் இன்றி மிகப்பெரும் வாழ்வாதார இழப்பையும், பொருளாதார நெருக்கடியையும் சந்திக்க உள்ள நிலையில், இக்குளங்களை பாதுகாத்து அதனை எமது அடுத்த தலைமுறைக்கு விடடுச் செல்வதுடன் எமது மாவட்ட விவசாய அபிவிருத்தியை மேலோங்கச் செய்யவேண்டும் என்பதே இங்குள்ள முக்கிய விடயமாகும். ஏற்கனவே காடழிப்பு அதிகரிப்பில் மழைவீழ்ச்சி குறைவடைந்து செல்லும் நிலையில் நீரைத் தேக்கி பாதுகாக்கும் குளங்கள் இவ்வாறு அழிவடைவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே அனைவரும் இன மத பேதமின்றி இக்குளங்களைப் பாதுகாப்புடன், குளங்களை அபகரிப்பதையும், குத்தகைக்கு விடும் நடவடிக்கைகளுக்குத் துணைபோகாமல் குளங்களைப் பாதுகாக்க முன்வரவேண்டும் என்பதுடன், அழிவடைந்து செல்ல இருக்கும் அல்லது காணாமல் போக இருக்கும் குளங்களைப் பாதுகாக்க அனைவரும் ஒருங்கிணையவேண்டும் என அனைத்து மக்களும், சமூக ஆர்வலர்களும், இயற்கை வளங்களை நேசிப்பவர்களும் வேண்டி நிற்கின்றனர்.

**தாயகத்தான்**

# புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்து 'Operation Trust' இராணுவ நடவடிக்கை

**கடந்தவாரத் தொடர்ச்சி...**

அங்கு என்ன நடக்கின்றது என்று உலகில் யாருக்குமே தெரியாது. அப்படிப்பட்ட ரஷ்யாவிற்குள் பல்வேறு வேஷங்களில் நுழைந்து, அங்கிருந்து இரகசியங்களைத் திருடுவதும், அந்த இரகசியங்களை பிரித்தானியாவுக்குக் கடத்தி வருவதும் இலகுவான ஒரு காரியமல்ல. ஆனால் அதனைச் சாதித்துக் காட்டினார் சிட்னி ரெய்லி.

அது மாத்திரமல்ல அப்பொழுது இருந்த லெனினின் ஆட்சியைக் கலைத்துவிட்டு சிட்னி ரெய்லியை அதிபராக்கும் இரகசியச் சதித்திட்டமும் பிரித்தானியாவிடம் இருந்தது. அந்த நோக்கத்திலும் பல காய்கள் நகர்த்தப்பட்டுக் கொண்டிருந்தன ரஷ்யாவில். சோவியத்தின் இராணுவத்திற்கு ஒரு சந்தர்ப்பத்தில் சிட்னி ரெய்லி என்ற இந்த மோசமான உளவாளி பற்றி தெரியவந்த பொழுது, ரஷ்யாவில் தங்கியிருந்த அவர் மிகவும் சாதுர்யமாகத் தப்பி பிரித்தானியா வந்து சேர்ந்தார். மிகவும் பாதுகாப்பாக அங்கு அமர்ந்தும் கொண்டார். அதன் பின்னர் பிரித்தானியாவில் இருந்தபடியே ரஷ்யாவின் ஆட்சியைக் கவிழ்க்கும் சதி வேலைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். இந்த சிட்னி ரெய்லியை கைது செய்ததுதான் 'Operation Trust' என்ற இராணுவ நடவடிக்கையின் மிகப்பெரிய வெற்றி என்று வரலாற்றில் பதிவாகி இருக்கின்றது.

**எப்படிக் கைதுசெய்தார்கள்?**

கைது செய்யவில்லை, ஒரு வகையில் சதி செய்து கடத்திச் சென்றார்கள் என்று கூறலாம். லெனினின் ஆட்சியை எப்படிக் கவிழ்ப்பது என்று சதா சிந்தித்துக்கொண்டிருந்த சிட்னி ரெய்லிக்கு, MUCR என்ற புரட்சிகர அமைப்பின் ஐரோப்பிய வருகை பற்றிய செய்தி இனிப்பாகக் கிடைத்தது. அந்த அமைப்பைத் தொடர்புகொண்டு தனது ஆதரவைத் தெரிவித்தார். மிகவும் சந்தோஷம் என்று அவரை கைகுலுக்கி வரவேற்றது MUCR இனது ஐரோப்பியப் பிரிவு. MUCR என்ற பெயரில் ரஷ்யாவின் கே.ஜீ.பி. உறுப்பினர்கள்தான் அங்கு வந்திருக்கின்றார்கள் என்று சிட்னி ரெய்லிக்குத் தெரியாது. தானாகவே சென்று வலையில் வீழ்ந்தார். லெனினின் ஆட்சியை எப்படி வீழ்த்தலாம் என்று அவர்களுடன் சேர்ந்து நுணுக்கமாகத் திட்டம் தீட்டினார். ஆனால், இங்கே லண்டனில் அமர்ந்துகொண்டு லெனினை வீழ்த்துவது எப்படி? ரஷ்யாவில் ஆட்சிதான் அமைப்பது எப்படி? அதற்கு ரஷ்யாவிற்கு நேரில் போகவேண்டும் அல்லவா?

'ரஷ்யாவில் மிகவும் பலமாகச் செயற்படும் எங்களது உறுப்பினர்களூடாக உங்கள் இரகசியப் பயணத்திற்கு நாங்கள் ஏற்பாடு செய்து தருகின்றோம்' என்றது MUCR இனது ஐரோப்பியப் பிரிவு. 'நீங்களே நேரடியாகச் சென்று ஆட்சிக் கவிழ்ப்புத் திட்டம் பற்றி விளக்கிச்சொன்னால் அங்குள்ள எங்கள் உறுப்பினர்களுக்குத் தெம்பாக இருக்கும். மேலும் உற்சாகமாகச் செயற்படுவார்கள்.' சிட்னி ரெய்லிக்கு ஐடியா கொடுத்தார்கள் MUCR இனது ஐரோப்பியப் பிரிவு.

ரஷ்யாவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு என்று மிகவும் இரகசியமாகப் புறப்பட்ட சிட்னி ரெய்லி, ரஷ்யாவில் பகிரங்கமாகக் கைது செய்யப்பட்டார். அவரை ரஷ்யாவிற்கு இரகசியமாக அழைத்துச் சென்ற கே.ஜீ.பி. உறுப்பினர்களே, ரஷ்ய எல்லையை அடைந்ததும் அவரைக் கைது செய்தார்கள். சித்திரவதைகள், விசாரணை, துப்பாக்கிச்சூடு என்று மிகவும் சோகமாக முடிவடைந்தது பிரபல்யமான, திறமையான ஒரு வீரனின் வாழ்க்கை.

அதுமாத்திரமல்ல, இவர் போன்று புலம்பெயர்ந்த நாடுகளில் ரஷ்ய ஆட்சிக்கு எதிராகச் செயற்பட்டுக் கொண்டிருந்த பல புரட்சியாளர்கள், தேசப்பற்றாளர்கள், தேசியவாதிகள் ஏமாற்றப்பட்டார்கள். படுகொலை செய்யப்பட்டார்கள். காணாமல் போனார்கள், கடத்தப்பட்டார்கள். செயலிழக்க வைக்கப்பட்டார்கள். இதுதான் 'Operation Trust' என்ற இராணுவ நடவடிக்கை. உலக அளவில் மிகவும் வெற்றிகரமான ஒரு உளவு நடவடிக்கை.

உலக நாடுகளின் புலனாய்வுப் பிரிவினருக்கான ஒரு முக்கிய பாலர் பாடம்தான் 'Operation Trust' என்ற இந்த இராணுவ நடவடிக்கை. இப்பொழுது உள்ள மிகப் பெரிய கேள்வி இதுதான். 'Operation Trust' போன்ற ஒரு உளவு நடவடிக்கையை புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்து சிறிலங்கா இராணுவம் மேற்கொள்கின்றதா? கொஞ்சம் சிக்கலான கேள்விதான். ஆனாலும் புலம்பெயர் தமிழர்கள் பெரிதாக யோசித்தேயாகவேண்டிய கேள்வி. ஆம் மேற்கொள்ளப்படுகின்றது என்று உறுதியாகக் கூறுவதற்கு என்னிடம் போதியளவு ஆதாரம் கிடையாது. ஆனால் அப்படியான ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கான சந்தர்ப்பங்களும், சாத்தியங்களும் நிறையவே இருக்கின்றன என்று என்னால் உறுதியாகக் கூற முடியும். அந்தச் சாத்தியங்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள், தளபதிகள், போராளிகள் என்று ஏராளமானவர்கள் 'கொத்தாக' சிறிலங்கா இராணுவத்தின் கரங்களில் கிடைத்தார்கள். அவர்களை முழுக்க முழுக்க சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர்தான் கையாண்டு வருகின்றார்கள். அப்படித் தமது கரங்களில் கிடைத்தவர்களை அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பயன்படுத்தி வருகின்ற சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு, அவர்களை நிச்சயம் தமது புலனாய்வுத் தேவைகளுக்குப் பயன்படுத்தாமல் வைத்திருக்கமாட்டார்கள்.



இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அனைத்து செயற்பாடுகளும் இலங்கையில் ஓரளவு முழுமையாகவே அழிக்கப்பட்டுவிட்ட நிலையில், விடுதலைப் புலிகள்வசம் இருந்த ஆயுதங்கள், அவற்றை இயக்கக் கூடியவர்கள் என்று அனைத்துமே சிறிலங்கா இராணுவத்தால் கைப்பற்றப்பட்டுவிட்ட நிலையில், புலம்பெயர் சமூகத்தின் செயற்பாடுகள்தாம் சிறிலங்கா தேசத்தை கொஞ்சம் சங்கடத்தில் ஆழ்த்தும்படியாக இருந்து வருகின்றன. எனவே சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு தனது அத்தனை பலத்தையும் நிச்சயமாகப் புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்துத்தான் திருப்பிவிட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. சரி, புலம்பெயர் தமிழர்களைக் குறிவைத்து சிறிலங்காவின் புலனாய்வுப் பிரிவு என்ன செய்யலாம்?

செயற்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்கள், சமூகத்தலைவர்கள், ஊடகவியலாளர்கள் போன்ற வர்களை விலைபேசலாம். மிரட்டலாம். ஆனால் விலை போகக்கூடியவர்கள் அனைவரும் ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்னரே விலைபோய்விட்டார்கள். சிங்களத்தின் மிரட்டல்களுக்கு கலங்கக்கூடியவர்கள் மீதும் சிறிலங்கா புலனாய்வுப் பிரிவும் அதன் கூலிகளும் கைவைத்து நீண்ட நாட்களாகிவிட்டன. இவை எதற்கும் அகப்படாமல் எஞ்சியிருப்பவர்கள்தான் சிங்களத்திற்கு தற்பொழுது பிரச்சினை. எதற்கும் அஞ்சாமல், எதற்கும் விலைபோகாமல் புலம்பெயர் தேசங்களில் ஓர்மமாக நின்று கொண்டிருப்பவர்கள் பற்றித்தான் சிறிலங்கா கொஞ்சம் சிந்திக்கின்றது. கவனமெடுக்கின்றது.

எதற்கும் அடிப்பணியாமல் வீரமாக புலம்பெயர் தேசங்களில் நின்று போராடும் அப்படிப்பட்ட மறத் தமிழர்களை என்னசெய்யலாம்? இது பற்றிப் பார்ப்பதானால், சுமார் ஒன்றரை வருடங்கள் நாம் பின்நோக்கிச் செல்லவேண்டும். முள்ளிவாய்க்கால் முடிவினைத் தொடர்ந்து அப்பொழுது ஒரு பெரிய வெற்றிடம் காணப்பட்டது. புலிகளை தாம் முற்றாகவே அழித்துவிட்டதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்தது. தளபதிகள், போராளிகள், ஆதரவாளர்கள், மக்கள் என்று அனைவரையுமே சிறைக்குள் தள்ளிவிட்டு, தனது வெற்றியை பல நாட்கள் கொண்டாடியது சிங்களத் தலைமை.

ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் தமது வெற்றிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய சில ஆபத்துக்கள் இலங்கையில் பரவலாக மறைந்து இருந்ததை சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவு உணர்ந்தது. அதாவது, வடக்கு கிழக்கு மற்றும் தென் இலங்கைக் காடுகளில் ஆயுதங்களுடன் புலிகளின் சிறிய சிறிய அணிகள் நிலைகொண்டிருந்தன. அதேபோன்று கொழும்பிலும், தென் இலங்கையிலும், புலிகளின் புலனாய்வுப் பிரிவினர் மக்களோடு மக்களாக கலந்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். உத்தரவு கிடைத்ததும் செயற்படுவதற்கென்று ஏராளமான தற்கொலைப் போராளிகளும் பல இடங்களிலும் மறைந்திருந்தார்கள்.

புலிகள் மீதான வெற்றி என்று கொண்டாடிக் கொண்டிருந்த சிங்களத்திற்கு, இந்த விடயம் ஒரு பெரிய அச்சுறுத்தலாகவே இருந்தது. வடக்கு கிழக்கில் உள்ள காடுகளிலும், தென் இலங்கை மற்றும் தலைநகர் கொழும்பிலும் பயங்கர ஆயுதங்களுடன் மறைந்திருக்கும் நூற்றிற்கும் அதிகமான விடுதலைப் புலி உறுப்பினர்களை கண்டு பிடிக்கவேண்டும். அழிக்க வேண்டும். இந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவு, ஒரு இரகசிய நடவடிக்கையை மேற்கொண்டது. அந்த நடவடிக்கை கிட்டத்தட்ட 'Operation Trust' உளவு நடவடிக்கையை ஒத்ததாகவே இருந்தது.

தம்மிடம் சரணடைந்த அல்லது தம்மால் கைது செய்யப்பட்ட சில விடுதலைப் புலி முக்கியஸ்தர்களை சித்திரவதை செய்து, அவர்களது மனைவி குழந்தைகளைப் பணயம் வைத்து, மிகவும் கவனமாக ஒரு இரகசிய நடவடிக்கையை மேற்கொண்டது சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவு. அதாவது, முள்ளிவாய்கால் நடவடிக்கையின் பொழுது சிறிலங்கா இராணுவத்தால் கைப்பற்றப்படாமல் சில தளபதிகள், ஒரு தொகுதி விடுதலைப் புலி உறுப்பினர்கள் தப்பித்து வன்னிக் காடுகளில் உள்ள நிலக்கீழ் சுரங்கங்களில் மறைந்திருந்து செயற்படுவது போன்ற ஒரு தோற்றப்பாடு திட்டமிட்டு உருவாக்கப்பட்டது.

தொடரும்...

சூழியோடி

# பிராந்தியச் செய்திகள்

## தமிழ், சிங்களப் புத்தாண்டு : திங்கட் கிழமையும் அரச விடுமுறை அறிவிப்பு!



இலங்கையில் தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமையை விசேட அரச விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை பொது நிர்வாக அமைச்சு அன்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்டுள்ளது.

தமிழ், சிங்களப் புத்தாண்டு எதிர்வரும் 14ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இந்நிலையில், வரும் 13, 14ஆம் திகதிகளான செவ்வாய் மற்றும் புதன் கிழமைகள் விடுமுறை நாட்களாகவுள்ளதால் அதற்கு இடைப்பட்ட திங்கட் கிழமைக்கும் அரச விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் பண்டிகைக் காலத்தை மக்கள் கடும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கொண்டாட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 16 வாரங்களுக்குப் பிறகு இரண்டாவது டோஸை வழங்க அரசாங்கம் தீர்மானம்

இந்தியாவின் சீரம் நிறுவனத்திடம் இருந்து மேலும் ஒரு தொகுதி அஸ்ட்ராசெனெகா தடுப்பூசிக்காக இலங்கை தொடர்ந்து காத்திருப்பதால், இரண்டாவது டோஸை மக்களுக்கு வழங்கும் நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தலைமையிலான கொரோனா வைரஸ் கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட செயலணியில் விவாதித்ததாக அறிய முடிகின்றது.

12 வாரங்களுக்கு மாறாக 16 வாரங்களுக்குப் பின்னர் இரண்டாவது தடுப்பூசியை வழங்குவது குறித்து சுகாதார அமைச்சு ஆய்வு செய்து இறுதி முடிவை எடுக்க உள்ளது.

கோவிஷீல்ட் அஸ்ட்ராசெனெகா தடுப்பூசியை ஜனவரி முதல் இலங்கை 900,000 பேருக்கு செலுத்தியுள்ளது. இருப்பினும் சீரம் நிறுவனம் தடுப்பூசியின் ஏற்றுமதியை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

சீரம் நிறுவனம் தடுப்பூசி ஏற்றுமதியை நிறுத்தியுள்ளதால், முதல் டோஸ் பெற்ற அனைவருக்கும் இரண்டாவது டோஸ் வழங்க முடியாது என்ற கவலைகள் எழுந்துள்ளன.

இருப்பினும் ஏப்ரல் மற்றும் ஜூலை மாதங்களுக்கு இடையில் கோவிஷீல்ட் அஸ்ட்ராசெனெகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸை வழங்க முடியும் என அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

## நள்ளிரவு முதல் முன்னெடுக்கவிருந்த புகையிரத பணிபகிஷ்கரிப்பு இடைநிறுத்தம்



அன்று(2021.04.09) நள்ளிரவு முதல் முன்னெடுக்கவிருந்த புகையிரத பணிபகிஷ் கரிப்பு இடைநிறுத்தப்பட்டதாக ரயிவே திணைக்களம் தெரிவித்துள்ளது. வழமைபோல் புகையிரத சேவைகள் முன்னெடுக்கப்படும் என ரயிவே திணைக்களம் அறிவித்துள்ளது.

புகையிரத பொது மேலாளர் நியமனம் குறித்து ஏற்பட்டுள்ள சர்ச்சையினால் புகையிரத ஓட்டுனர்கள், கட்டுப்பாட்டளர்கள் அன்று(2021.04.09) 12 மணி முதல் மாலை 4 வரை தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் நள்ளிரவு முதல் தொடர்ச்சியான பணிபகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், அன்று(2021.04.09) பிற்பகல் போக்குவரத்து அமைச்சகத்துடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் பின்னர் பணிபகிஷ்கரிப்பை இடைநிறுத்தத் தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளதாக ரயிவே திணைக்களம் அறிவித்துள்ளது.

## மணிவண்ணன் பிணையில் விடுதலை!

இலங்கையில் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்க முற்பட்டமை தொடர்பாக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம், நீதவான் நீதிமன்றில் அன்று (வெள்ளிக்கிழமை) மாலை அவர் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், இரண்டு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் நீதவான் ஏ.பீற்றர் போல் மணிவண்ணனை விடுவித்து உத்தரவிட்டுள்ளார். மணிவண்ணனுக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் உட்பட பலசட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர். யாழ். மாநகரத்தைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்கும் பொருட்டு, மாநகர சபையினால் மாநகர காவல் படை ஒன்று நேற்றுமுன்தினம் தமது பணியை ஆரம்பித்தது. இதற்குப் பிரத்தியேகமாக சீருடை ஒன்றும் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த காவல் படை மற்றும் சீருடை குறித்து சர்ச்சையை ஏற்படுத்தும் வகையில் சில இணைய ஊடகங்கள், சமூக வலைத்தளங்களில் செய்திகள் பரவியிருந்தன. விடுதலைப் புலிகளின் காவல் துறையின் சீருடைய ஒத்ததாக மாநகர காவல் படையின் சீருடை இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இது குறித்து யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணனிடம் அன்று இரவு யாழ்ப்பாணம் பொலிஸார் ஆறு மணித்தியாலங்கள் விசாரணையை முன்னெடுத்தனர். இதன்பின்னர், விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்ய முயற்சிப்பதாகக் கூறி மணிவண்ணன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் அன்று காலை கைதுசெய்யப்பட்டார்.

இந்நிலையில், வவுனியாவில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் விசாரணை அலுவலகத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டிருந்தார். இதற்கிடையில் மணிவண்ணன் பயங்கரவாதச் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி மணிவண்ணன் கைதுசெய்யப்பட்டமைக்கு பல்வேறு தரப்பிலிருந்தும் கடும் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டன. அத்துடன், அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறும் வலியுறுத்தப்பட்டதுடன் அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்சும் இது குறித்துக் கவலை வெளியிட்டிருந்தார். இந்த சூழலில், இலங்கை நேரப்படி அன்று மாலை மணிவண்ணன் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





## கடலில் மிதந்து வந்த போத்தலில் இருந்த திரவத்தை அருந்தியவர் உயிரிழப்பு!

யாழ். வடமராட்சி பகுதில் உள்ள கடலில் மிதந்து வந்த போத்தல் ஒன்றில் இருந்த திரவத்தை அருந்தியவர் உயிரிழந்துள்ளார். வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் மேற்கு பகுதியை சேர்ந்த கந்தையா சிறிக்குமார் (வயது 47) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடலில் மிதந்து வந்த போத்தல் ஒன்றினை குறித்த நபர் எடுத்து திறந்து பார்த்துள்ளார். அதனுள் திரவம் இருந்துள்ளது. அதனை மதுபானம் என நினைத்து அருந்தியுள்ளார்.

அதனை அருந்தி சில நிமிடங்களில் மயக்கமடைந்துள்ளார். அதனை அங்கிருந்தவர்கள் அவதானித்து அம்பன் வைத்திய சாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மந்திகை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட வேளை அவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மந்திகை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. அதேவேளை பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.






## நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ்க்கு திருமணமா?

நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் திருமண கோலத்தில் இருக்கும் புகைப்படம் ஒன்று சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகி வருகிறது.

காக்கா முட்டை படத்தில் தனது நடிப்புத் திறமையின் மூலம் அனைவரையும் ஈர்த்தவர் நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ். தொடர்ந்து வடசென்னை, கனா, நம்ம வீட்டு பிள்ளை, தர்மதுரை, செக்க சிவந்த வானம், வானம் கொட்டட்டும், கா/பெ ரணசிங்கம் போன்ற படங்களில் வித்தியாசமான கதாபாத்திரங்களை ஏற்று நடித்து முன்னணி நடிகையாக உயர்ந்தார்.




இதனிடையே, நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் திருமண கோலத்தில் இருக்கும் புகைப்படம் ஒன்று சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலானது. இந்நிலையில், அந்த புகைப்படத்தின் பின்னணி குறித்து தெரியவந்துள்ளது.

அதன்படி, நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் தற்போது கண்ணன் இயக்கும், தி கிரேட் இந்தியன் கிச்சன் படத்தின் தமிழ் ரீமேக்கில் நடித்து வருகிறார். அப்படத்தில் இவர் திருமணமான பெண்ணாக நடிக்கிறார். அதில் ஐஸ்வர்யா ராஜேஷ்க்கும், ராகுல் ரவீந்திரனுக்கும் திருமணமாகும் காட்சியை படமாக்கி வந்துள்ளனர். அந்த புகைப்படம் தான் தற்போது வெளியாகி வைரலாகி வருகிறது.

## பிரபல ரோஜா சீரியல் நடிகை ப்ரியங்காவின் அம்மாவின் சமீபத்திய புகைப்படம்



பிரபல சன் டிவி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் சீரியல் ரோஜா. சன் டிவியின் TRP யில் உச்சத்தில் இருக்கும் சீரியலும் ரோஜா தான். இந்த சீரியலில் கதாநாயகனாக அர்ஜீன் கதாபாத்திரத்தில் சிபு சூர்யன் என்பவர் நடிக்க, பிரியங்கா என்பவர் ரோஜா எனும் கதாநாயகி கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்.

மேலும் நடிகை பிரியங்கா நல்காரிகாகவே இந்த ரோஜா பார்க்கும் ரசிகர்கள் அதிகமாக உள்ளனர், அந்த அளவிற்கு இவருக்கு ரசிகர்கள் கூட்டம் அதிகமாக உள்ளனர். அதுமட்டுமின்றி முதலில் தெலுங்கில் குழந்தை நட்சத்திரமாக நடித்து வந்த நடிகை பிரியங்கா, ரோஜா சீரியல் மூலம் தமிழ் ரசிகர்களை கவர்ந்துள்ளார். இந்நிலையில் தற்போது நடிகை பிரியங்கா அவரின் அம்மாவுடன் எடுத்துக்கொண்ட சமீபத்திய புகைப்படம் ஒன்று வெளியாகியுள்ளது.

## செம்பருத்தி சீரியலில் இணைந்த பிரபல சீரியல் நடிகர்

ஒரு காலத்தில் TRPயில் டாப்பில் இருந்த சீரியல் செம்பருத்தி. ஜீ தமிழில் ஒளிபரப்பாகி இந்த சீரியல் திடீரென மக்களிடம் அதிகம் பிரபலமானது. ஒரு கட்டத்தில் டாப் சீரியல் இதுதான் என இருந்தது. ஆனால் இப்போது இந்த சீரியல் TRP யில் எங்கேயோ உள்ளது. இதனால் செம்பருத்தி சீரியல் ரசிகர்களுக்கு கொஞ்சம் வருத்தம் தான்.



தற்போது சீரியல் 1000வது எபிசோடை எட்டிவிட்டது. இதற்கான ஸ்பெஷல் கொண்டாட்டத்தில் சீரியல் குழுவினர் உள்ளனர். கடந்த சில எபிசோடுகளாகவே புதிய புதிய நடிகர்கள் இதில் வருகின்றனர். நாமும் அவர்களின் விவரங்களை உங்களுக்கு கொடுத்து வருகிறோம்.

இப்போதும் அப்படி ஒரு தகவல் வந்துள்ளது. இந்த சீரியல் 1000வது எபிசோடை எட்டியுள்ள நிலையில் பிரபல சீரியல் நடிகர் ஸ்ரீ செம்பருத்தி சீரியலில் இணைந்துள்ளார். அவர் ஒரு போலீஸ் அதிகாரியாக நடிக்க இருக்கிறாராம்.

## திடீரென சம்பளத்தை குறைத்த நடிகை சமந்தா.... ஏன் தெரியுமா?

சகுந்தலை படத்தில் சகுந்தலா கதாபாத்திரத்தில் நடிக்க அனுஷ்கா, பூஜா ஹெக்டே ஆகியோர் பரிசீலிக்கப்பட்டன, இறுதியில் சமந்தாவை ஒப்பந்தம் செய்தனர்.

சகுந்தலை புராண கதை சினிமா படமாக தயாராகிறது. இந்த படத்தில் சகுந்தலையாக நடிகை சமந்தா நடிக்கிறார். இந்த படம் நேரடியாக தமிழ், தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் தயாராகிறது. குணசேகர் இயக்குகிறார். இவர் ஏற்கனவே அனுஷ்கா நடித்து தமிழ், தெலுங்கில் வெளியான ருத்ரமா தேவி படத்தை இயக்கியவர். சகுந்தலை படத்தில் சகுந்தலா கதாபாத்திரத்தில் நடிக்க அனுஷ்கா, பூஜா ஹெக்டே ஆகியோர் பரிசீலிக்கப்பட்டனர். இறுதியில் சமந்தாவை ஒப்பந்தம் செய்தனர்.

இந்தப் படத்தில் நடிக்க சமந்தா ரூ.2.50 கோடி சம்பளம் வாங்குகிறார். இதற்கு முன்பு ரூ.3 கோடி வாங்கிய சமந்தா, சகுந்தலை படத்தில் தனது கதாபாத்திரம் பிரதானமாக இருப்பதாலும், தான் நடிக்கும் முதல் புராண படம் என்பதாலும் சம்பளத்தை ரூ.50 லட்சம் குறைத்து இருக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் சமந்தாவுக்கு ஜோடியாக இளம் நடிகர் தேவ் மோகன் நடிக்கிறார்.




## கமலின் 'விக்ரம்' படப்பிடிப்பு தொடங்கியது

தமிழக சட்டசபை தேர்தல் முடிவடைந்த நிலையில், நடிகர் கமல்ஹாசன் விக்ரம் படத்தில் நடிக்க தயாராகி உள்ளார்.

நடிகர் கமலின் 232 வது படம் 'விக்ரம்'. கமலின் சொந்த தயாரிப்பு நிறுவனமான ராஜ்கமல் பிலிம்ஸ் தயாரிக்கும் இப்படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்குகிறார். அனிருத் இப்படத்திற்கு இசையமைக்க உள்ளார். பிரபல மலையாள நடிகர் பஹத் பாசில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார். இப்படம் குறித்த அறிவிப்பு கடந்தாண்டே வெளியிடப்பட்டாலும், கமலின் அரசியல் பணிகள் காரணமாக படப்பிடிப்பு தொடங்கப்படாமல் இருந்தது.

இதனிடையே தமிழக சட்டசபை தேர்தல் முடிவடைந்த நிலையில், நடிகர் கமல்ஹாசன் விக்ரம் படத்தில் நடிக்க தயாராகி உள்ளார். மேலும் கமல்ஹாசனுடன் விமானத்தில் பயணிக்கும் போது எடுத்த புகைப்படத்தை டுவிட்டரில் பகிர்ந்துள்ள லோகேஷ் கனகராஜ் 'ஆரம்பிக்கலாங்களா' என குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் விக்ரம் படத்தின் படப்பிடிப்பு தொடங்கியது உறுதியாகி உள்ளது. இப்படத்தின் படப்பிடிப்பை ஒரே கட்டமாக நடத்தி முடிக்க திட்டமிட்டுள்ளனர்.



தொகுப்பு :- ஹாசினி




# சரும பிரச்சனைகளுக்கு இளநீர் தீர்வு !!

வயிற்றுக்போக்கு பிரச்சனை இருக்கும் போது உடலில் நீர்ச்சத்து அதிக அளவில் குறைவதால் இழந்த நீர்சத்தை திரும்ப பெற இளநீர் அருந்துவது மிகவும் நல்லது.

இளநீரில் குறைந்த அளவே கொழுப்பு இருப்பதால் மற்றும் இளநீரை பருகும்போது வயிறும் நிறைந்து போவதால், தேவையற்ற உணவுகளை சாப்பிட முடியாமல் உடல் எடை குறைய உதவுகிறது.

இளநீரில் சர்க்கரை நோயாளிகளுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் இருப்பதாலும், இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை கட்டுப்பாட்டில் வைக்க உதவுவதாலும், நீரிழவு நோய் உள்ளவர்கள் இளநீர் பருகுவது மிகவும் நல்லது.



இளநீர் தோல் சம்பந்தமான வியாதிகள் அனைத்தையும் குறிப்பாக சோரியாசிஸ் வியாதி ஏற்படாமல் தடுப்பதில் சிறப்பாக செயல்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இளநீரில் அதிக அளவு பொட்டாசியம் இருப்பதால் உயர் இரத்த அழுத்தம் மற்றும் வாதம் சம்பந்தமான நோய்களுக்கும் மருந்தாக அமைகிறது.

பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் போன்ற கனிமங்கள் இளநீரில் அதிகம் இருப்பதால் சிறுநீரகத்தில் கற்கள் உருவாவதை தடுக்கும்.

தினமும் இளநீர் குடிப்பவர்களுக்கு உடலில் இந்த எலக்ட்ரோலைட் உப்புச்சத்துக்கள் கிடைக்கப் பெற்று, உடலுக்கு புத்துணர்ச்சியையும், சுறுசுறுப்பையும் தந்து சிறப்பான உடல் இயக்கத்திற்கு வழிவகை செய்கிறது.

முகத்தில் ஏற்படும் பருக்கள்,புள்ளிகள், சுருக்கங்கள் மற்றும் படை போன்ற இடங்களில் இளநீரை இரவில் படுக்கும்போது தடவிவிட்டு காலையில் கழுவவேண்டும். இதனை தொடர்ச்சியாக மூன்று வாரங்கள் செய்தால் சரும பிரச்சனைகள் சரியாகும்.

# இயற்கையான முறையில் பளபளக்கும் சருமம் பெற குறிப்புகள்

இரசாயனங்கள் என்றும் உங்களுக்கு நிரந்திரமான தீர்வை தரவல்லது அல்ல. தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் என்ற இலாப நோக்குடன் தான் அழகு சாதன பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. மற்றும் இதில் சிலவன பக்கவிளைவுகள் தரக்கூடியதும் கூட. எனவே, இயற்கையான முறையை பின்பற்றுவது தான் சரியான தீர்வை அளிக்கும்.

**கரட் மற்றும் பால்**

**கரட்டை நன்றாக அரைத்து பாலில் கலந்து மேனியில் தடவி 10 நிமிடம் கழித்து குளித்து வந்தால் மேனி பளபளப்பாகும்.**

**கரட், ஒரஞ்சு மற்றும் எலுமிச்சை**

**சம அளவு கரட் சாறு, ஒரஞ்சு பழச்சாறு, எலுமிச்சை பழச்சாறு மற்றும் பன்னீர் ஆகியவற்றை எடுத்து அதனுடன் தயிர் சேர்த்து நன்றாக கலந்து முகம் மற்றும் கழுத்தில் பூசி சிறிது நேரம் ஊற வைத்து பிறகு கழுவி வந்தால் முகம் பளபளப்பாகும்**

**எலுமிச்சை சாறு**

**எலுமிச்சை பழத்தை இரண்டாக நறுக்கி இரவு படுக்கச் செல்லும் முன் முகப்பரு உள்ள இடத்தில் தடவி சிறிது நேரம் கழித்து குளிர்ந்த தண்ணீர் கொண்டு முகத்தைக் கழுவி வந்தால் முகப்பரு குறையும். இவ்வாறு தொடர்ந்து மூன்று நாட்கள் செய்து வந்தால் முகப்பரு குறையும்.**

**பால் மற்றும் கடற்சங்கு**

**கடற்சங்கை எடுத்து நன்கு சுத்தம் செய்து அதை பசும்பால் விட்டு அரைத்து பருக்கள் மீது பூசி வந்தால் இரண்டே நாட்களில் பருக்கள் குறையும்.**

**புதினா மற்றும் தேன்**


**புதினா இலைகளை அரைத்துச் சிறிதளவு தேன், எலுமிச்சை சாறு சேர்த்துக் குழைத்து முகத்தில் பூசி வந்தால் கரும்புள்ளிகள் மறைந்து விடும்.**

**பப்பாளிப்பழம்**

**பப்பாளிப் பழத்தை நன்கு பிசைந்து முகம், கழுத்து, கைகளில் பூசி 30 நிமிடங்கள் கழித்து முகம் கழுவ முகப்பொலிவு அதிகரிக்கும்.**

**எலுமிச்சை சாறு ஆவி**

**எலுமிச்சை சாறு பிழிந்த நீரில் ஆவி பிடிக்கல், முகத்தில் இருக்கும் மாசினை அகற்றி பளபளப்பாக்க உதவும்.**



காதலித்து பார்ப்பதை விட ...
காதலை தள்ளி நின்று பாருங்கள் ...
அதன் அழகு என்ன வென்று புரியும்...
காலத்தால் அழிக்க முடியாத காவியங்களை காதல் ஒன்றால்
மட்டுமே கொடுக்க முடியும்....
இன்று காதலிப்பவர்கள் பல கனவுகளை சுமர்ந்து வாழ்ந்து
கொண்டிருக்கினர்...
அன்று காதலித்தவர்கள் பல நினைவுகளை சுமர்ந்து வாழ்ந்து
கொண்டிருக்கின்றனர்..




தோற்றத்தை வைத்து
யாரையும்
வேண்டாம் என
ஒதுக்காதீர்கள்..
ஒருவேளை
அவருக்கு சேர வேண்டிய
மொத்த அழகையும்....
கடவுள்
அவர் இதயத்தில்
வைத்திருக்கலாம்.....



**தொகுப்பு :– ஹாசினி**

02ஆம் பக்கத் தொடர்ச்சி...

தமிழ் நாடு தனி நாடாக மாற்றம் பெற்றுவிடும் என அஞ்சியது. எனவே தான் விடுதலைப்புலிகளை அழித்தொழிக்க களத்தில் இறங்கியது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை தனிநாடாக தமிழீழம் உருவாகிவிட்டால் தனியரசாக உருவாகிவிட்டால் விடுதலைப் புலிகளிடம் கையேந்தவேண்டிவரும் என அஞ்சியது. இரட்டைக் கோபுரத் தாக்குதல் நடந்ததைப்போல எந்நேரமும் அச்சம் கொள்ளவேண்டிவரும். தாம் எதிர்காலத்தில் தாக்குதல்களை சந்திக்க வேண்டிவரும். இலங்கையை தமது தேவைக்கேற்ப பயன்படுத்த தனது செயற்பாடுகளை இலங்கையில் விஸ்தரிக்க விடுதலைப்புலிகள் வளர்ச்சி பெற்றால் தடையாக எதிர்காலத்தில் விளங்குவார்கள். முக்கியமான துறைமுகம் அவர்களின் கையில் சிக்கிவிடும். கடல் வளங்கள் தமக்குச் சாதகமாக அமையாது என நன்கு சிந்தித்துத்தான் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவர கைகொடுத்தார்கள். சீனாவும் தனது நலனைக் கொண்டுதான் இலங்கையுடன் கைகோர்த்து இன்றும் பயணிக்கிறது. இலங்கையைக் காப்பாற்றத் தேவையான அனைத்து நடவடிக்கை களையும் மேற்கொண்டு வருகின்றது.

உலக நாடுகளின் கப்பல்கள் இலங்கையின் கடற்பரப்பிற்குள் விடுதலைப்புலிகளின் காலத்தில் வரவில்லை. வந்தாலும் மிகச்சிரமம். தமது நாட்டின் கப்பல்கள் கரும்புலித் தாக்குதல்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும் எனப் பயந்தார்கள். இலங்கையின் கடற்பரப்பில் தாம் சாதாரணமாக நடமாட முடியாது. அதற்குத் தடையாக வளர்ந்துவரும் விடுதலைப்புலிகள் அமைப்பை உலக நாடுகள் விரும்பவில்லை என்பதுவே உண்மை.

உலக நாடுகள் தொடர்ந்தும் இலங்கையில் யுத்தத்தை எதிர்பார்க்கிறார்கள். இனங்களுக்கிடையில் முறுகல் நிலை யினைத் தோற்றுவிக்கவே முனைகிறார்கள். அதற்கான முன்நடவடிக்கைகளே உலக அரசியல் அரங்கில் நடைபெற்று வருகின்றது. அடக்குமுறைகளின் ஊடாக யுத்தத்தைத் திணிக்க உலகநாடுகள் முயன்றுவருகின்றனர். அந்நிய நாட்டுப்படைகளுடன் இலங்கை போராட வேண்டிய சூழ்நிலைகள் உருவாகிவருகின்றது. இந்தியப்படைகளுடன் தமிழினம் போராடி ஒன்றும் கிடைக்கவில்லை. இன்றும் இந்தியா எம்மைப் பழிவாங்குகிறது. ஆனால் சிங்கள இராணுவ வீரர் ஒருவர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களை துப்பாக்கியின் பின்புறத்தால் பிடரியில் தாக்கினார்.

அந்நிய நாட்டுப்படைகளின் ஊடுறுவல்களை தடுத்துநிறுத்துகின்ற வேலைகளை முதலில் அரசு செய்யவேண்டும். இலங்கையில் தமிழ் மக்களுக்கானத் தீர்வுகளை அரசு நினைத்தால் வழங்கலாம். செய்ய முடியாது என எதுவுமில்லை. ஆனால் அந்நிய நாட்டுப் படைக ளின் ஆக்கிரமிப்பிற்கு இலங்கை முகங்கொடுக்குமாகவிருந்தால் பாரிய பிரச்சினைகள் உருவாகும். தமிழ் பேசும் மக்களாகிய முஸ்லீம் மக்களுக்கும் இந்நாட்டில் பிரச்சினை. இன்று ஒட்டுமொத்த முஸ்லீம் மக்களும் தீவிரவாதிகள் போல இந்நாட்டில் பார்க்கப்படுகின்றார்கள். இந்நாடு சிங்கள மக்களுக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. மூவின மக்களுக்கும் சொந்தமானது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். பெரும்பான்மையாக சிங்கள மக்கள் வாழ்வதால் சிறுபான்மை மக்களை அடக்கியாள நினைக்க முடியாது. தமிழினத்துடன் போராடி உங்களால் வெற்றி பெற முடியவில்லை.

உலக நாடுகளுடன் உதவியுடன் தான் உங்களால் விடுதலைப்புலிகளை வெற்றிகொள்ள முடிந்தது என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். மக்களுக்கிடையில் இனக்குரோதங்களை வளர்க்காதீர்கள். இனத்துவேசம் பேசி உங்களை நீங்களே தாழ்த்திக்கொள்ளாதீர்கள். இந்நாட்டில் அனைத்து இன மக்களும் சுதந்திரமாக வாழவேண்டும். அதைத்தான் தமிழினம் விரும்புகிறது. சகல உரிமைகளையும் பெற்று அனைவரும் இந்நாட்டில் வாழவேண்டும்.

பிரபாகரனின் புகைப்படத்தை பதிவேற்றம் செய்வதால் இங்கு பிரச்சினையில்லை என்பதை அரச தரப்பினர் விளங்கிக்கொள்ளவேண்டும். செய்வதற்கான விடயங்கள் எவ்வளவோ இந்நாட்டில் இருக்கிறது. அதையெல்லாம் விட்டுவிட்டு தொடர்ச்சியாக இனங்களுக்கிடையில் குரோதங்களை வளர்க்கின்ற வேலைகளைச் செய்யாதீர்கள். தமிழ் அரசியல்வாதிகள் எதிரி களாக இருங்கள் துரோகம் செய்பவர்களாக மாறிவிடாதீர்கள். நாம் தொடர்ந்தும் தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடியே ஆகவேண்டும் என்பதுவே காலத்தின் கட்டாயம்.

# 'தமிழினத்தின் சாட்சியம் ஓய்ந்தது'

**'முள்ளிவாய்க்கால் படுகொலையை திட்டமிட்ட அரசு மேற்கொண்டது – முன்னாள் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை' அவர்கள் 19.04.2015 அன்று தினப்புயல் பத்திரிகைக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல் (மீள்பிரசுரம்)**

கடந்தவாரத் தொடர்ச்சி...

தகுதியுடையவர்களுக்கே இவ் வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும். ஆகவே ஐ.நாவால் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டு வருகின்றது. 13வது திருத்தச்சட்டம் என்பதும் எமக்கு பயனற்றது. ஒற்றையாட்சியின் கீழ் பகிர்ந்தளிக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. எல்லாவற்றுக்கும் அரசியல் சாசனத்தில் மாற்றம் தேவை. தமிழ் மக்களை இவர்கள் ஒட்டுண்ணிகளாக பார்க்கின்றார்கள். அவ்வாறில்லை. இவ்வாறான நிலை தொடருமாகவிருந்தால் தொடர்ந்தும் இனப்படுகொலைகளும் இனவழிப்புக்களும் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன.

**கேள்வி** – தொடர்ந்து வந்த இலங்கையின் ஆட்சியாளர்கள் டட்லி சேனாநாயக்க - மஹிந்த ராஜபக்ஷ வரையான அனைவருமே இனப்படுகொலையினையே மேற்கொண்டனர். தற்போதைய அரசாங்கம் ஒரு கூட்டரசாங்கம். அரசாங்கம் இதனை போர்க்குற்றம் தான் இனப்படுகொலை அல்ல எனக்கூறி வேறு திசையில் மாற்ற முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதனை இனப்படுகொலை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய அமைப்புக்கள் அடங்கலாக ஐ.நா சபையிலும் வலியுறுத்துகின்றார்கள். தற்போதைய அரசாங்கம் இதனை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்** – இனப்படுகொலைக்கு அத்திவாரம் யாப்பு. அதாவது இந்த அரசியலமைப்பு. இதனை முதலாவதாக மாற்றவேண்டும். அரசாங்கம் இதனை மேற்கொள்வதற்கு ஒருபோதும் அனுமதிக்காது. ஆளுந்தரப்பு மற்றும் எதிர்க்கட்சியினர் இதனை ஓரங்கட்டியே வருகின்றனர். குறிப்பாகச் சொல்லப்போனால் தென்னிலங்கையில் இருக்கின்ற தமிழ் மக்கள் காணிகளை விலைக்குப் பெற்றே வசிக்கின்றார்கள். பலாத்காரமாக அவர்கள் குடியிருக்கவில்லை. தமிழர்களை தென்னிலங்கையில் குடியேற்றிய வரலாறு இருக்கின்றதா? இல்லை. இதைத்தான் இன அழிப்பின் வெவ்வேறு வடிவங்கள் எனக் கூறுகின்றோம்.

தொடரும்...

# சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்

அடக்கப்படாமல் உள்ள மனமும், அறவழியில் செலுத்தப்படாத மனமும் நம்மை எப்போதும் கீழ் நோக்கியே இழுத்துச் சென்று அழித்துவிடும்.
அடக்கப்பட்ட மனமும், அறவழியில் செல்லும் மனமும் நமக்குப் பாதுகாப்பை அளித்திடும். உலகபந்தங்களில் இருந்து விடுதலையளிக்கும்.

எல்லாப் பெருமையையும், எல்லா ஆற்றலையும், எல்லாத் தூய்மையையும் ஆன்மா தூண்டுகிறதே தவிர, ஆன்மாவைத் தூண்டுவது எதுவும் இல்லை.

ஆயிரம் ஆண்டுகள் கங்கையில் நீராடிய போதிலும் சரி,
அல்லது ஆயிரம் ஆண்டுகள் காய்கறி உணவையே உண்டு வந்தாலும் சரி,
உன்னுள்ளே இருக்கும் ஆன்மிகம் விழிப்படையாவிட்டால், அதனால் ஒரு பயனும் இல்லை.

மக்களுக்கு சேவை செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டு
நாத்திகனுக்கு தரும சிந்தனை இருக்கலாம்.
ஆனால் மதகோட்பாடு இருக்க இயலாது.
மதத்தில் நம்பிக்கை வைத்தவனுக்கு தருமசிந்தை அவசியம் இருக்க வேண்டும்.

கபடம் இல்லாத நாத்திகன் வஞ்சகனை விடச் சிறந்தவன் ஆவான்.
காமம், பொன்னாசை இவைகளால் ஆளப்படும் அற்பர்கள் பொருட்படுத்தப்படக்கூடியவர்கள் அல்லர்.

நமக்குப் பல அனுபவங்களை பெற்றுத்தர இந்த உலகம் படைக்கப்பட்டது.
இங்கிருக்கும் ஒவ்வொரு பொருளும் நம்மால் அனுபவிக்கப்பட வேண்டியது என்பதில் சந்தேகமில்லை.
அதற்காக அது வேண்டும், இது வேண்டும் என யாரிடமும் கேட்காதே.
வேண்டுதல் ஒரு பலவீனமாகும்.
இந்த வேண்டுதல்தான் நம்மை பிச்சைக்காரர்களாக்குகிறது.
நாம் அனைவரும் ராஜகுமாரர்கள், பிச்சைக்காரர்கள் அல்ல.

கோபத்தில் ஒருவரை ஒரு அடி அடித்துவிடுவது எளிது.
ஆனால் எழும் கையை தாழ்த்தி மனதைக் கட்டுப்படுத்தி அமைதியாய் இருப்பது கடினமான செயல். இந்த கடினமான செயலைத்தான் நீ பழகிக்கொள்ள வேண்டும்.
ஏதாவது தவறு செய்துவிட்டால், ஐயோ! நான் தீயவன் ஆகிவிட்டேனே!" என்று வருத்தப்பட வேண்டாம். நீ நல்லவன்தான், ஆனால், இன்னும் உன்னை நல்லவனாக்க முயற்சி செய்ய வேண்டும்.

# உலகில் அதிக செல்வந்தர்கள் வாழும் நகரம் கொரோனா பாதிப்பிலும் முதலிடம் பிடித்த சீனத் தலைநகர்



உலகில் பிற நகரத்தைக் காட்டிலும் சீனத் தலைநகர் பீஜிங்கில்தான் அதிக செல்வந்தர்கள் வாழ்வதாக ஃபோர்ப்ஸ் பட்டியல் தெரிவிக்கிறது.

ஃபோர்ப்ஸ் பட்டியலில் 100 செல்வந்தர்களின் எண்ணிக்கையுடன் பீஜிங் நகரம் முதலாவது இடத்தில் உள்ளது. கடந்த வருடத்தைக் காட்டிலும் இந்த வருடத்தின் எண்ணிக்கையில் 33 பேர் அதிகமாகச் சேர்ந்துள்ளனர். இந்த 100 செல்வந்தர்களில் முதலாம் இடத்தில் இருப்பவர் சாங் யீமிங். இவரது சொத்து மதிப்பு 35.6 பில்லியன் அமெரிக்க டொலர். இவர் வேறு யாரும் இல்லை. டிக் டொக் செயலியின் நிறுவனர். டிக் டொக்கின் தாய் நிறுவனமான பைட் டான்ஸின் முதன்மை நிர்வாகி. இவரின் சொத்து மதிப்பு கடந்த ஆண்டில் இரட்டிப்பாகியுள்ளது.

பீஜிங்குக்கு அடுத்தபடியாக இந்தப் பட்டியலில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரம் உள்ளது. இந்த நகரில் மொத்தம் 99 செல்வந்தர்கள் உள்ளனர். கடந்த வருடத்தைக் காட்டிலும் இந்த வருடம் 12 பேர் புதிதாகப் பட்டியலில் இடம்பிடித்துள்ளனர். இந்த 99 பேர் பட்டியலில் முதலாது இடம் பிடித்தவர் மைக்கேல் ப்ளூம்பெர்க் என்பவர். இவரின் சொத்து மதிப்பு 59 பில்லியன் அமெரிக்க டொலர்.

2021-ம் ஆண்டுக்கான ஃபோர்ப்ஸ் உலக செல்வந்தர்கள் பட்டியலில் இடம்பிடித்துள்ள மொத்த 2,755 பேரில் கால்வாசிப் பேர் உலகின் வெறும் 10 நகரங்களில் வாழ்கின்றனர். அதில் சீனாவின் நான்கு மெட்ரோ நகரங்களில் மட்டும் 10 சதவிகிதத்துக்கும் அதிகமானோர் வாழ்கின்றனர்.

கொரோனா பெருந்தொற்று முதன்முதலில் தொடங்கியதாகக் கூறப்படும் சீனாவின் பொருளாதாரம் அதீத வேகத்தில் வளர்ந்துவருகிறது என்றசெய்திகளுக்கு மத்தியில், இந்தச் செய்தி வந்திருக்கிறது. பெருந் தொற்றைச் சமாளிக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த சீனா, தனது தொழில்நுட்ப நிறுவனத்தால் இந்த நிலையை அடைந்திருக்கிறது. கடந்த வருடம் அதிக செல்வந்தர்களைக் கொண்ட பட்டியலில் சீனா நான்காவது இடத்தில் இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பீஜிங், நியூயோர்க்குக்கு அடுத்தபடியாக இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள நகரம் ஹொங்கொங். இங்கு கடந்த வருடத்தைக் காட்டிலும் ஒன்பது பேர் செல்வந்தர்களாகப்பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். சீனாவின் அரசியல் தலையீடு, சீனாவுக்கு எதிரான மக்களின், குறிப்பாக இளைஞர்களின் ஜனநாயகத்துக்கு ஆதரவான போராட்டங்கள் இவை எல்லாவற்றுக்கும் மத்தியிலும் அந்த நகரத்தின் செல்வந்தர்கள் பட்டியலில் கடந்த வருடத்தைக் காட்டிலும் ஒன்பது பேர் புதிதாகச் சேர்ந்துள்ளனர். இதற்கு அடுத்தபடியாக ரஷ்யத் தலைநகர் மொஸ்கோ இடம் பெற்றுள்ளது. இங்கு 79 செல்வந்தர்கள் இருக்கிறார்கள்.




### இந்தியாவுக்கு என்ன இடம்?

இந்தியாவின் மும்பை நகரம் இந்தப் பட்டியலில் 8-வது இடத்தில் உள்ளது. ஆனால், இந்தியாவில் மொத்தமாக 140 செல்வந்தர்கள் உள்ளனர். இந்த எண்ணிக்கையால் அதிக செல்வந்தர்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. மும்பை நகரைப் பொறுத்தவரை கடந்த வருடத்தைக் காட்டிலும் இந்த வருடம் புதிதாக 10 செல்வந்தர்கள் இந்தப் பட்டியலில் இணைந்துள்ளனர். மும்பையில் மொத்தம் 48 செல்வந்தர்கள் இருக்கிறார்கள். அவர்களில் அதிக சொத்து மதிப்புகொண்டவர் முகேஷ் அம்பானி. இவரின் சொத்து மதிப்பு 84.5 பில்லியன் அமெரிக்க டொலர். இது முதல் மற்றும் இரண்டாம் இடத்திலுள்ள பீஜிங் மற்றும் நியூயோர்க் நகரச் செல்வந்தர்களின் சொத்து மதிப்பைக் காட்டிலும் அதிகம். லண்டன் நகரம் இந்தப் பட்டியலில் ஏழாம் இடத்தைப் பிடித்துள்ளது.

### சீனாவின்பொருளாதாரவளர்ச்சிக்கு என்ன காரணம்?

முன்னதாகக் கூறியபடி பெருந்தொற்றைச் சமாளிக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த நாட்டுக்குப் பெரிதும் உதவியது அதன் தொழில்நுட்ப நிறுவனங்கள். அமெரிக்காவைப் போலவே சீனாவின் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு உண்மையில் பெருந்தொற்றுக் காலம் ஒரு வரமாகத்தான் இருந்தது. ஆம், ஒன்லைனில் ஷொப்பிங் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. பொழுதுபோக்கு தளங்களின் தேவையும் அதிகரித்தது. இது சீனாவுக்கு அதிகமாகக் கைகொடுத்தது.

ஆசிய-பசிபிக் பகுதியில் மட்டும் 1,149 செல்வந்தர்கள் இருக்கிறார்கள். இவர்களின் மொத்தச் சொத்து மதிப்பு அமெரிக்காவின் செல்வந்தர்களின் சொத்து மதிப்பைக் காட்டிலும் அதிகம்.

உலக அளவில் 724 செல்வந்தர்களைக் கொண்டு அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. சீனா 698 பேர் என இரண்டாம் இடத்தில் உள்ளது.

ஃபோர்ப்ஸ் பட்டியல்படி கடந்த வருடம் 493 புதிய செல்வந்தர்கள் பட்டியலில் இணைந்துள்ளனர். அதாவது 17 மணி நேரத்துக்கு ஒரு செல்வந்தர் இந்தப் பட்டியலில் இணைந்திருக்கிறார்.

இது எல்லாம் சரி. உலகப் பணக்காரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்திருப்பவர் யார் என்று கேள்வி எழுகிறதா? தொடர்ந்து நான்காவது வருடமும் அமேஸான் நிறுவனத்தின் நிறுவனர் ஜெஸ் பெஸோஸ்தான் உலகின் பணக்காரர் என்ற பெயரை பெற்றிருக்கிறார். இவரின் சொத்து மதிப்பு 177 பில்லியன் அமெரிக்க டொலர்.

**– விகடனுக்காக திலகவதி**




## 533 மில்லியன் பேஸ்புக் பயனர்களின் தகவல்கள் திருட்டு: அதிர்ச்சியில் இணையவாசிகள்

முன்னணி இணையத்தளங்களை பயன்படுத்தும் பயனர்களின் தரவுகள் கசிவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

இப் பிரச்சினைக்கு பேஸ்புக் நிறுவனமும் முகங்கொடுத்து வருகின்றது.

இப்படியான நிலையில் தற்போது சுமார் 533 மில்லியன் பயனர்களின் தரவுகள் கசிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 6 மில்லியன் வரையான இந்திய பயனர்களின் தரவுகளும் கசிந்துள்ளன.

இச் சம்பவத்தினை Alon Gal எனும் இணையப் பாதுகாப்பு ஆய்வாளர் கண்டுபிடித்துள்ளார்.

இவ்வாறு திருடப்பட்ட தரவுகளில் முழுப் பெயர், பேஸ்புக் ஐடி, தொலைபேசி இலக்கம், இருப்பிடம், மின்னஞ்சல் முகவரி உட்பட மேலும் பல தகவல்கள் உள்ளடங்குவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




## கூகுள் கொண்டுவரும் புதிய தடை

ஸ்மார்ட் கைப்பேசிகளில் நிறுவப்படும் அப்பிளிக்கேஷன்கள் பல்வேறு வகையான உளவு நடவடிக்கைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக அப்பிளிக்கேஷன்கள் ஊடாக பயனர்களின் இருப்பிடங்களை அறிதல், பயணம் செய்யும் இடங்களை அறிதல், மொபைல் சாதனங்களில் நிறுவப்பட்டுள்ள ஏனைய அப்பிளிக்கேஷன்கள் தொடர்பான தகவல்களை திரட்டுதல் போன்ற செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள ஏனைய அப்பிளிக்கேஷன்களை அறிந்துகொள்ளும்வசதியானது பயனர்களுக்கு அசௌகரியத்தினை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு கூகுள் நிறுவனம் இவ் வசதிக்கு தடையினை கொண்டுவர முடிவு செய்துள்ளது. அதாவது அன்ரோயிட் சாதனங்களில் நிறுவப்படும் எந்தவொரு அப்பிளிக்கேஷனும் எதிர்காலத்தில் ஏனைய நிறுவப்பட்டுள்ள அப்பிளிக்கேஷன்கள் தொடர்பான தகவல்களை திரட்ட முடியாது.



## யூடியூப்பில் தரப்படவுள்ள புதிய வசதி: தற்போது பரீட்சார்த்த முயற்சியில்

உலகின் முன்னணி வீடியோ பகிரும் தளமாக நீண்டகாலமாக யூடியூப் விளங்கி வருகின்றது.

இத் தளத்தில் ஏராளமான வசதிகள் தரப்பட்டுள்ளன.

இவற்றில் லைக் மற்றும் டிஸ்லைக் செய்யும் வசதிகளும் தரப்பட்டுள்ளன.

இவ்வாறு தரப்பட்டுள்ள டிஸ் லைக் வசதியினை பொதுவான பார்வைக்கு அல்லாத வகையில் மறைக்கக்கூடிய வசதியை அறிமுகம் செய்வதற்கு யூடியூப் தீர்மானித்துள்ளது.


அதாவது யூடியூப் கிரியேட்டர் ஒருவர் விரும்பின் டிஸ்லைக் வசதியை ஏனையவர்களுக்கு காட்டாத வகையில் மறைத்து வைத்திருக்க முடியும்.

In response to creator feedback around well-being and targeted dislike campaigns, we're testing a few new designs that don't show the public dislike count. If you're part of this small experiment, you might spot one of these designs in the coming weeks (example below!). pic.twitter.com/aemrIcnrbx

— YouTube (@YouTube) March 30, 2021

இதன் மூலம் அதிக டிஸ்லைக் கொண்ட வீடியோக்கள் தொடர்பிலான மக்களின் எதிர்மறை சிந்தனையை இல்லாது செய்ய முடியும்.

தற்போது பரீட்சார்த்த முயற்சியில் இருக்கும் இவ் வசதியானது விரையில் பயனர்களின் பாவனைக்கு வரவுள்ளது.




## புது ஐபோன் எஸ்இ பற்றிய விவரங்கள் இணையத்தில் லீக்!

இணையத்தில் ஐபோன் எஸ்இ புது மாடல் பற்றிய விவரங்கள் வெளியாகி உள்ளது. அதன்படி மூன்றாம் தலைமுறை ஐபோன் எஸ்இ 2022 ஆம் ஆண்டு அறிமுகமாகும் என்றும் இதில் 4.7 இன்ச் எல்சிடி ஸ்கிரீன், 5ஜி வசதி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதைத் தொடர்ந்து 2023 வாக்கில் மற்றொரு ஐபோன் எஸ்இ மாடலை அப்பிள் அறிமுகம் செய்ய இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த மாடல் 6.3 இன்ச் டிஸ்ப்ளே, பன்ச் ஹோல் கேமரா போன்ற அம்சங்களை கொண்டிருக்கும் எனவும் கூறப்படுகிறது.

மேலும் 2023 ஆண்டு அறிமுகமாகும் ஐபோன் 14 சீரிஸ் பன்ச்-ஹோல் ரக டிஸ்ப்ளே கொண்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.



**செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் சகல வகைகளையும் வளைத்துப் பிடித்து, அதை யாரும் கற்பனை செய்யாத கோணத்தில் பயன்படுத்தும் நபரே, உலகின் முதல் 'ட்ரில்லியனாதிபதி' ஆகப்போகிறார்.**

**மார்க் கியூபன்**
**அமெரிக்க தொழிலதிபர்**




## மரதன் ஓட்டத்தில் புதிய உலக சாதனை படைப்பு!

கென்யாவின் ருத் செப்ன்கெடிச் (Ruth Chepngetich) என்ற பெண்மணி, பெண்களுக்கான அரை மரதன் ஓட்டத்தில் புதிய உலக சாதனையைப் படைத்துள்ளார்.

இவர் ஒரு மணி நேரம், நான்கு நிமிடங்கள் மற்றும் இரண்டு வினாடிகளில் (01:04:02) இலக்கை அடைந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த ஆண்டு பெப்ரவரியில் எத்தியோப்பியாவின் அபாபெல் யேசானே (Ababel Yeshaneh) பதிவுசெய்த ஒரு மணிநேரம் நான்கு நிமிடங்கள் 31 விநாடிகள் (01:04:31) என்ற சாதனை அரை நிமிடங்கள் வித்தியாசத்தில் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதே போட்டியில் எத்தியோப்பியாவின் யலெம்ஸெர்ஃப் யோஹுவாலவ் (Yalemzerf Yehualaw) (1:04:40) இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளதுடன் கென்யாவின் ஹெலன் ஒபிரி (Hellen Obiri) (1:04:51) மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

அத்துடன், ஒரே அரை மரதன் ஓட்டத்தில் மூன்று பெண்கள் 65 நிமிடங்களுக்குள் ஓடி முடித்துள்ளமையும் சாதனையாகப் பார்க்கப்படுகிறது.




## டோக்கியோ ஒலிம்பிக் தொடரில் பங்கேற்க போவதில்லை: வடகொரியா திடீர் முடிவு!

உலகில் மர்மமான நாடாக விளங்கும் வடகொரியா, டோக்கியோ ஒலிம்பிக் தொடரில் பங்கேற்க போவதில்லை என அறிவித்துள்ளது.

ஜப்பானில் அதிகரித்துவரும் கொரோனா வைரஸ் (கொவிட்-19) அச்சுறுத்தல் காரணமாக வடகொரியா இந்த முடிவினை எடுத்துள்ளது.

கடந்த மார்ச் 25ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக விளையாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வடகொரியாவில் கொரோனா வைரஸின் பாதிப்பு இல்லாததால் தங்களது விளையாட்டு வீரர்களின் நலனை முன்னிட்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜப்பானில் நடக்கவிருந்த ஒலிம்பிக் தொடர், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக இந்த ஆண்டு ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கமைய ஒலிம்பிக் தொடர், எதிர்வரும் ஜூலை 23ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 8ஆம் திகதி வரையும் பாரா ஒலிம்பிக்ஸ் போட்டிகள் ஒகஸ்ட் 24ஆம் திகதி முதல் செப்டம்பர் 5ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன.

விளையாட்டு உலகின் மிகப்பெரிய போட்டித் தொடராக கருதப்படும் ஒலிம்பிக் தொடர், 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.




## மியாமி பகிரங்க டெனிஸ்: ஹூபர்ட் ஹர்காஸ்- ஆஷ்லே பார்டி சம்பியன்!

அமெரிக்காவில் விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்றுவந்த மியாமி பகிரங்க டென்னிஸ் தொடர் இனிதே நிறைவுப் பெற்றுள்ளது. நடப்பு ஆண்டுக்கான தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில், ஹூபர்ட் ஹர்காசும், பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் ஆஷ்லே பார்டியும் சம்பியன் பட்டம் வென்றுள்ளனர். முதலாவதாக ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியின் முடிவினை பார்க்கலாம்,

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், போலந்தின் ஹூபர்ட் ஹர்காஸ், இத்தாலியின் ஜெனிக் சின்னரை எதிர்கொண்டார். பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், இருவரும் ஆக்ரோஷமாக மோதிக்கொண்டனர்.

இதன்பலனாக முதல் செட்டே இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை பரிசளித்தது. டை பிரேக் வரை நகர்ந்த இந்த செட்டில், ஹூபர்ட் ஹர்காஸ் கடுமையாக போராடி 7-6 என செட்டைக் கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டிலும், ஹூபர்ட் ஹர்காஸின் ஆதிக்கம் தொடர்ந்தது.

இதில், நிதானத்துடன் விளையாடிய ஹூபர்ட் ஹர்காஸ், செட்டை 6-4 என கைப்பற்றி சம்பியன் கிண்ணத்தை வென்றார். இந்த வெற்றியின் மூலம் ஹூபர்ட் ஹர்காஸ், முதல் 'மாஸ்டர்ஸ் 1000' சம்பியன் பட்டத்தை வென்றார். அடுத்ததாக பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியின் முடிவினை பார்க்கலாம்.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், அவுஸ்ரேலியாவின் ஆஷ்லே பார்டி, கனடாவின் பியான்கா ஆண்ட்ரெஸ்குவுடன் பலப்பரீட்சை நடத்தினார். விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், முதல் செட்டை 6-3 என்ற கணக்கில் ஆஷ்லே பார்டி, வென்றார். தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், 4-0 என்ற கணக்கில் ஆஷ்லே பார்டி முன்னிலைப் பெற்றிருந்த போது, பியான்கா ஆண்ட்ரெஸ்கு கணுக்கால் காயம் காரணமாக போட்டியிலிருந்து வெளியேறினார்.

இதனால், உலகின் முதல் நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்டி, சம்பியன் பட்டத்தை வென்றார். இந்த வெற்றியின் மூலம், கடந்த ஆண்டு பெற்ற சம்பியன் பட்டத்தை ஆஷ்லே பார்டி, தக்கவைத்துக்கொண்டார்.



## இலங்கை – பங்களாதேஷ் தொடர்: பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை

சுற்றுலா பங்களாதேஷ் மற்றும் இலங்கை அணிகள் இடையில் இம்மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் போது பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படமாட்டர்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய இரண்டு கிரிக்கெட் அணிகளும் ஐ.சி.சி. இன் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பிற்காக விளையாடவுள்ள இந்த டெஸ்ட் தொடர் பற்றி இன்று இலங்கை கிரிக்கெட் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போதே இந்த தொடரில் பார்வையாளர்கள் எவரும் அனுமதிக்கப்படமாட்டர்கள் என்னும் விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதேவேளை இந்த டெஸ்ட் தொடரின் போது ஊடகவியலாளர்கள் மைதானத்திற்குச் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கை - பங்களாதேஷ் அணிகள் இடையிலான டெஸ்ட் தொடரின் முதல் போட்டி ஏப்ரல் 21ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரையிலும், இரண்டாவது டெஸ்ட் போட்டி ஏப்ரல் 29ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 03ஆம் திகதி வரையிலும் கண்டி பல்லேகல சர்வதேச மைதானத்தில் நடைபெறுகின்றது.



இந்த டெஸ்ட் தொடருக்காக பங்களாதேஷ் கிரிக்கெட் அணி அடுத்த வாரம் இலங்கை வருவதோடு, டெஸ்ட் தொடர் ஆரம்பமாக முன்னர் இரண்டு நாட்கள் கொண்ட பயிற்சிப் போட்டி ஒன்றிலும் எதிர்வரும் 17ஆம் திகதி விளையாடவிருக்கின்றது.

# உலக செய்திகள்

## பல ஆண்டுகளாக தரித்துநின்ற ஈரான் சரக்குக் கப்பல் மீது கண்ணிவெடித் தாக்குதல்!

செங்கடலில் பல ஆண்டுகளாக தரித்துநின்ற ஈரான் சரக்குக் கப்பல் மீது கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எம்வி சாவிஸ் சரக்குக் கப்பல் மீது செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. காந்த விசையில் கப்பலின் அடிப்பகுதியில் ஒட்டிக் கொள்ளக் கூடிய கண்ணிவெடி மூலம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலை இஸ்ரேல் நடத்தியிருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. ஈரானுக்கும் ஐ.நா. பாதுகாப்பு சபை உறுப்பினர்கள் மற்றும் ஜேர்மனிக்கும் இடையே கடந்த 2015ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அணுசக்தி ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, ஈரான் மீதான பொருளாதாரத் தடைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.


அதன் ஒரு பகுதியாக, ஈரானின் சரக்குக் கப்பல் எம்வி சாவிஸீக்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் விலக்கிக் கொள்ளப்பட்டது. இந்த நிலையில், கடந்த 2016ஆம் ஆண்டு செங்கடல் பகுதிக்கு வந்த அந்தக் கப்பல் இதுவரை அங்கேயே நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கப்பல் ஈரானின் இராணுவ கண்காணிப்புக்காகவும் அருகிலுள்ள யேமனில் தங்களது ஆதரவு பெற்ற ஹ°தி கிளர்ச்சியாளர்களுக்கு உதவி செய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டுவருவதாக சவுதி அரேபியா குற்றஞ்சாட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.



## அஸ்ட்ராஸெனெகா தடுப்பூசியால் அரிதான அளவு பக்க விளைவுகளே ஏற்படும்: ஐரோப்பிய மருந்துகள் நிறுவனம்

ஒக்ஸ்போர்ட்- அஸ்ட்ராஸெனெகா தடுப்பூசியால் அரிதான அளவு பக்க விளைவுகளே ஏற்படும் என ஐரோப்பிய மருந்துகள் நிறுவனம் தெரிவித்துள்ளது. அஸ்ட்ராஸெனெகா தடுப்பூசி செலுத்திக் கொள்வதால், மிக ஆபத்தான நோய் ஏற்படுவதாக தொடர் புகார்கள் எழுந்ததற்கு மத்தியில் இந்த செய்தி வெளிவந்துள்ளது.

இரத்தம் உறைதல் அச்சம் காரணமாக, 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அஸ்ட்ராஸெனெகாவின் கொவிட்-19 தடுப்பூசியை பயன்படுத்துவது விவாதப் பொருளாகியுள்ளது. இதனால், ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் கனடா உள்ளிட்ட பிற நாடுகள் தடுப்பூசி பயன்பாட்டை வயதானவர்களுக்கு மட்டும் கட்டுப்படுத்தியுள்ளது.




## உலகளவில் கொவிட்-19 தொற்றினால் 29இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு!

உலகளவில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றினால், மொத்தமாக 29இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். தற்போதுவரை வைரஸ் பெருந்தொற்றினால், 13கோடியே 36இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர, மொத்தமாக வைரஸ் தொற்றிலிருந்து 10கோடியே 78இலட்சத்துக்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர். உலகளவில் கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப்பினை எதிர்கொண்ட முதல் நாடாக அமெரிக்கா விளங்குகின்றது.

அமெரிக்காவிற்கு அடுத்தப்படியாக அதிக தொற்று பாதிப்பினை எதிர்கொண்ட நாடுகளாக பிரேஸில், இந்தியா, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் உள்ளன.

## லண்டனில் உள்ள பிரித்தானியாவுக்கான மியன்மார் தூதர் வெளியேற்றம்!

லண்டனின் மேஃபர் பகுதியில் உள்ள மியன்மார் நாட்டு தூதரகத்தின் தூதர் க்யாவ் ஸ்வார் மின், வெளியேற்றப்பட்டுள்ளார். மியன்மார் தூதரகத்தின் இராணுவ அதிகாரி (Military Attache) மற்ற தூதரக அதிகாரிகளை வெளியேறுமாறு கூறியுள்ளார். மியன்மார் தூதர் க்யாவ் ஸ்வார் மின், சிறை பிடிக்கப்பட்டுள்ள ஆங் சான் சூகியின் விடுதலைக்கு ஆதரவாக குரல் கொடுத்ததன் பின்னணியில் அவர் வெளியேற்றபட்டுள்ளார். தூதர் க்யாவ் ஸ்வார் மின், தூதரகக் கட்டடத்தின் முன், லண்டனின் மெட்ரோபொலிடன் பொலிஸாரோடு பேசிக் கொண்டிருப்பது போன்ற படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து தூதர் க்யாவ் ஸ்வார் மின் கூறுகையில், 'நான் வெளியேற்றப்பட்டு இருக்கிறேன். இது லண்டனில் நடக்கும் ஒரு வகையான ஆட்சிக் கவிழ்ப்பு' என கூறினார். க்யாவ் ஸ்வார் வெளியேற்றப்பட்ட பின், துணைத் தூதர் சிட் வின் பிரித்தானியாவுக்கான தூதராக பொறுப்பேற்றுள்ளார். க்யாவ் ஸ்வாரே, மியன்மார் இராணுவத்தில் கர்னலாக உயர் பதவியில் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## வட கொரியாவில் வைரஸ் பாதிப்பு இல்லை - WHOவிடம் அறிக்கை தாக்கல்!

கொரோனா வைரஸ் தொற்று தமது நாட்டில் இல்லை என வடகொரியா உலக சுகாதார ஸ்தாபனத்திடம் அறிக்கையொன்றை தாக்கல் செய்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் வடகொரியாவுக்கான பிரதிநிதி எட்வின் சால்வடார் கூறுகையில், கடந்த ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி வடகொரியாவில் 23 ஆயிரத்து 121 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

எனினும் பரிசோதனை முடிவில் யாருக்கும் வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதியானதாக அவர் மேலும் தெரிவித்தார். அதன் பின்னர் கடந்த மார்ச் 26ஆம் திகதி முதல் ஏப்ரல் முதலாம் திகதி வரை 732 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டது.

எனினும் அதன் முடிவுகளை உலக சுகாதார அமைப்பிடம் வடகொரியா வழங்க மறுக்கிறது என்றும் எத்தனை பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள், அறிகுறிகளுடன் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதையும் கூற அரசு மறுக்கிறது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, வடகொரிய தலைநகர் பியாங்யாங்கில் நடைபெற்ற அரசியல் மாநாடு ஒன்றில் உரையாற்றிய அந்த நாட்டின் தலைவர் கிம் ஜாங் அன், ஏற்கனவே சர்வதேச நாடுகளின் பொருளாதார தடைகளால் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்கு மத்தியில் கொரோனா கட்டுப்பாடுகளால் உருவான பொருளாதார இழப்பு நாட்டை மிக மோசமான நிலைக்கு கொண்டுசென்றுள்ளதாக தெரிவித்தார்.

இந்த நிலையில், மோசமான சுகாதார கட்டமைப்பைக் கொண்ட வடகொரியாவில் வைரஸ் பாதிப்பு இல்லை என கூறப்படுவது நம்ப முடியாத ஒன்று என சர்வதேச நிபுணர்கள் கூறுகின்றனர். எனினும் கடுமையான கட்டுப்பாடுகள் மூலம் வைரஸ் பரவலைத் தடுத்ததாக வடகொரியா தொடர்ச்சியாக கூறி வருகின்றமை குறப்பிடத்தக்கது.






## வேலை செய்துகொண்டு 1,687km சைக்கிள் பயணம், கனவை நிஜமாக்கிய இளைஞர்கள்







கொரோனா நேரத்தில் லேப் டொப்பைக் கட்டிக் கொண்டு வீட்டிற்குள்ளே முடங்கிப்போன கோடிக்கணக்கான இளைஞர்களுக்கு மத்தியில் உற்சாகமான வாழ்க்கையை 3 இளைஞர்கள் நிகழ்த்திக் காட்டி இருக்கின்றனர். அதுவும் தங்களுடைய அலுவலக வேலையை பார்த்துக் கொண்டே ஜாலியாக சைக்கிளில் ஊர்ச் சுற்றி இருக்கின்றனர். இதற்காக எந்த மெனக்கெடலும் இல்லாமல் தங்களுடைய வாழ்நாள் கனவை நிறைவேற்றி கொண்டு உள்ளனர்.

பாக்கன் ஜார்ஜ், ஆல்வின் ஜோசப், ரதீஷ் பலோபவ் இந்த 3 இளைஞர்களும் மும்பையில் இருந்து கடந்த 3 மாதங்களுக்கு முன்பு சைக்கிளில் பயணம் செய்ய ஆரம்பித்து உள்ளனர். மேலும் தங்களுடைய பயணத்தைக் குறித்து கம்பெனி நிர்வாகத்திடமும் கூறியதோடு வேலை நேரத்தில் வேலை, மற்ற நேரத்தில் சைக்கிள் பயணம் என்ற டீலிங்கோடு பயணத்தைத் தொடங்கி கிட்டத்தட்ட 1,687 கி.மீ பயணத்தை சமீபத்தில் முடித்து உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மகாராஷ்டிராவில் இருந்து கிளம்பிய இந்த 3 பேரும் வழியில் பூனே, சதாரா, கோலாப்பூர், பெல்காம், ஹுபலி, டேவனசேரே, பெங்களூரு, சேலம், மதுரை, திருநெல்வேலி எனப் பல ஊர்களுக்கும் சென்று உள்ளனர். இவர்கள் மற்ற சுற்றுலா பயணிகளைப் போல இல்லாமல் ஒவ்வொரு ஊரின் உணவையும் அந்த ஊர் மக்களின் அன்பு, வாழ்க்கை முறை, வழிப் பயணம் எனத் தனி ரசனையான நிகழ்வுகளோடு தங்களுடைய பயணத்தைத் தொடர்ந்ததுதான் மற்றவர்களையும் ரசிக்க வைத்து இருக்கிறது.

கொரோனா நேரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் விரக்தியோடு வாழ்க்கையை நடத்தி வரும்போது இவர்கள் ஒரு உற்சாகமாக பயணத்தை மேற்கொண்டு இருப்பது பலருக்கும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தி இருக்கிறது. தங்களுடைய பயண அனுபவத்தை தெரிவித்த இவர்கள் கொரோனா கட்டுப்பாடு மற்றும் சில ஹோட்டல்களில் அனுமதிக்காதது தவிர வேறு எந்த கஷ்டத்தையும் பார்க்கவில்லை என்றே கூறி இருக்கின்றனர்.

மேலும் இந்த சைக்கிள் பயணம் ஒரு தியானத்திற்கு ஈடாக இருந்தது என்றும் வாழ்க்கையில் இப்படி ஒரு தருணத்திற்காக காத்திருந்ததாகவும் அந்த இளைஞர்கள் கூறியது பலரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தி இருக்கிறது. மற்ற நேரங்களில் வேலை,பொருளாதாரம் எனப் பல இடையூறுகளுக்காகத் தள்ளிப்போன இந்த இன்பச் சுற்றுலா,கொரோனா புண்ணியத்தில் நிறைவேறியதாகவும் அந்த இளைஞர்கள் கூறி உள்ளனர்.

இந்த சைக்கிள் பயணத்திற்காக ஒவ்வொரு இளைஞரும் தலா ரூ.25 ஆயிரத்தை செலவிட்டதாகவும் தெரிவித்து உள்ளனர். அதுவும் தங்களுடைய அலுவல் வேலைகளுக்காக ஹோட்டல்களில் தங்க வேண்டியே இந்தப் பணம் செலவானதாக அந்த இளைஞர்கள் தெரிவித்து உள்ளனர். மேலும் ஒருவருக்கொருவர் செலவு செய்வது, மற்றவர்களை எந்த எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் நேசிப்பது, அன்பு பாராட்டுவது போன்ற விஷயங்களையும் இந்த பயணத்தில் கற்றுக் கொண்டதாகத் தெரிவித்து உள்ளனர்

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 11.04.2021 அன்று வெளியிடப்பட்டது.